பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 13 புதன்கிழமை (30-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:337

# புலிகள் தரப்பு பிரதிநிதிகள் குழுவினர் 2 ஹெலிகளில் கொழும்பு சென்றனர்!

## போராளிகள், பொதுமக்கள் திரண்டு உற்சாகத்துடன் வழியனுப்பினர்

கிளிநொச்சி,ஒக்ரோபர்30

**தாய்லாந்தில் நாளை ஆரம்பமாகவிருக்கும் இரண்டாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக விடுதலைப் புலிகளின் ஒன்பது பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்று மாலை புதுக்குடியிருப்பிலிருந்து இரண்டு ஹெலிகொப்டர்களில் கொழும்புக்குப் புறப்பட்டனர்.**

**புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் மாலை 4.40 மணியளவில் தரையிறங்கிய விமானப்படையின் CH-522 ரக ஹெலிகள் இரண்டு, புலிகளின் பிரதிநிதிகளை கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு ஏற்றிச் சென்றது.**

விடுதலைப் புலிகளின் தளபதிகள், துறைப் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானவர்கள் அங்கு திரண்டு குழுவினரை வழியனுப்பி வைத்தனர்.

சரியாக 4.40 மணிக்கு தரையிறங்கிய ஹெலிகள் சுமார் 15 நிமிட நேரத்துக்குள் 4.55 மணிக்கு புலிகள் பிரதிநிதிகளை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து கிளம்பின.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், கிழக்கு மாகாண சிறப்புத் தளபதியும், புலிகளின் மூத்த உறுப்பினருமான கருணா ஆகியோர் ஒரு ஹெலியிலும் -

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், ஆலோசகர்களான வி.உருத்திரகுமார், ஜோய் மகேஸ்வரன்; தமிழ்ச்செல்வனின் உதவியாளர்களான அலக்ஸ், நெடில், தொல்காப்பியன் ஆகியோர் அடுத்த ஹெலியிலும் ஏறிப் பயணமாகினர்.

பேச்சுக்களில் கலந்துகொள்ளச் சென்ற பிரதிநிதிகள் நேற்று நண்பகல்முதல் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். அதன் பின்னர் தளபதிகள், போராளிகள், காவல் துறையினர் இணைந்து அவர்களை புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்குக்கு அழைத்து வந்து ஹெலியில் வழி அனுப்பி வைத்தனர்.

வழி அனுப்பும் வைபவத்தில் தளபதிகளான பொட்டு அம்மான், பானு, தீபன், விதுஷா, துர்க்கா, றொபேட் மற்றும் அரசியல் பிரமுகர் வே.பாலகுமாரன், காவல்துறைப் பொறுப்பா

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவிலிருந்து அதிகாலை விமானம் புறப்பட்டது

- கட்டுநாயக்காவிலிருந்து ந.வித்தியாதரன் -

கொழும்பு,ஒக்.30

நாளை தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கும் 2ஆம் சுற்றுப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரசு - விடுதலைப் புலிப் பிரதிநிதிகள் இன்று அதிகாலை 2.50 மணிக்கு 'கதே பசிபிக்' விமானத்தில் தாய்லாந்துக்குப் புறப்பட்டனர்.

புதுக்குடியிருப்பில் இருந்து இரு ஹெலிகள் மூலம் அழைத்து வரப்பட்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அறுவரும், உதவியாளர்கள் மூவரும் சுங்கப் பரிசோதனைக்கு முதலில் உட்படுத்தப்பட்டனர்.

இந்தக் குழுவில் இடம்பெறும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கருணா, தமிழ்ச்செல்வனின் உதவி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு என்ன என்பதை பேச்சு நடத்தமுன் கூறுங்கள்!

### ஜனாதிபதி வலியுறுத்துகிறார் என்கிறார் பேச்சாளர்

கொழும்பு,ஒக்.30

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு முன் வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அரசு கடைப்பிடிக்கும் அரசியல் தீர்வு என்ன என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

ஜனாதிபதி செயலகப் பேச்சாளரான ஹரிம் பீரிஸ் நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவிலில் மக்கள் மீளக்குடியமர அனுமதியில்லை! வீதி திறக்கவும் மறுப்பு!

### செயலக மாநாட்டில் படை அதிகாரிகள் விளக்கம்



யாழ்ப்பாணம்,ஒக்.30

நாகர்கோவில் பகுதியில் உள்ள படை முகாமை ஊடறுத்துச் செல்லும் நாகர்கோவில் - பருத்தித்துறை வீதியைப் பொதுமக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்த அனுமதிக்கமுடியாது. அந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்வதையும் அனுமதிக்க முடியாது.

யாழ்படைத் தலைமை இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த உயர்மட்ட மாநாட்டில் படைத்தரப்பின் இந்த நிலைப்பாடு பற்றி அறிவிக்கப்பட்டது.

நாகர்கோவில் பகுதியில் உள்ள மக்கள் தமது அன்றாடப் பணிகளை மேற்கொள்வதற்காக குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று வர நாகர்கோவில் - பருத்தித்துறை வீதியைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்றும் -

இந்தப் பாதையூடான போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருப்பதால் மக்கள் சுமார் 30 மைல்கள் தூரம் பயணத்தை மேற்கொள்ள வேண்டி உள்ளது என்றும் -

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஜி.ஜி கஜேந்திரகுமார் ஆகியோர் மாநாட்டில் சுட்டிக்காட்டினர்.

அதற்குப் பதிலளித்த படை அதிகாரிகள் நாகர்கோவிலில் உள்ள தமது படைத்தளம் தொடர்பான வரை படத்தைக் காண்பித்து தளத்தின் பாதுகாப்புக் கருதி அங்கு மக்களை மீளக் குடியமர அனுமதிக்க முடியாது என்றும், வீதியைத் திறக்க முடியாது என்றும் தெரிவித்தனர்.

நேற்றைய மாநாட்டில் பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கோரிக்கைகளுக்கு படைத்தரப்பினர் அளித்த பதில்களில் முக்கிய விடயங்கள் வருமாறு:-

(02ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி வலி.வடக்கு மக்கள் இன்று பேரணி

வலி.வடக்கு,ஒக்.30

வலி.வடக்குப் பகுதியில் இருந்து கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி பேரணி ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இருந்து புறப்படவுள்ள இப்பேரணி தெல்லிப்பழைப் பிரதேசசெயலகம் வரை இடம்பெறவுள்ளது.

பேரணியில் செல்பவர்கள் பிரதேச செயலகத்திற்குச் சென்று மகஜர்களைக் கையளிப்பர். அங்கு பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

வலி.வடக்கு, தெற்கு பொது அமைப்புகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் பேரணியை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரண்டு தசாப்தங்களாக இடம்பெயர்ந்து இருண்ட வாழ்க்கை வாழும் வலி.வடக்கு பகுதி மக்களின் துயர் துடைக்கப்பட வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறும் இயல்பு வாழ்க்கை வலி.வடக்கு மக்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டு வருவது ஏன்?

அடிப்படை மனித உரிமைகள் அற்ற அநாதைகளாக புனர்வாழ்வு முகாம்கள் என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள கொட்டில்களிலும் மாற்

(11ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் 'சென்றி'கள் பின்நகர்த்தப்படமாட்டா!

### பிரதித் தளபதி இரத்தினசபாபதி



யாழ்ப்பாணம்,ஒக்.30

வலி.வடக்குப் பகுதியில் - தெல்லிப்பழையில - பிரதான வீதியில் தற்சமயம் உள்ள சோதனை நிலையம் மற்றும் முன்னரங்க நிலைகள் பின்நோக்கி நகர்த்தப்படமாட்டா என்று யாழ். மாவட்ட பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கே. இரத்தினசபாபதி தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த உயர்மட்டப் பாதுகாப்பு மாநாட்டிலேயே அவர் இதனை அறிவித்தார்.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஜி.ஜி.கஜேந்திரகுமார், வலி-வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர்எஸ்.வேலாயுத (02ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் இரவில் திரும்ப இன்னும் அனுமதியில்லை



யாழ்ப்பாணம்,ஒக்.30

பகலில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் இரவு நேரத்தில் கரை திரும்ப அனுமதிப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. விசேட ஏற்பாடுகளை செய்த பின்னரே இதனை நடைமுறைப்படுத்த முடியும்.


இப்படிக் கூறினார் காங்கேசன்துறைக் கடற்படைத் தள அதிகாரியான கொமடோர் ஒபயசிங்க.

யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த உயர்மட்ட மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட காரைநகர், ஊரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் பகலில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் இரவில் கரை திரும்ப அனுமதிக்க வேண்டும் என்றும் -

(11ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





நேற்று யாழ்.செயலகத்தில் படைஅதிகாரிகள் அரச உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள்:தேவராஜன்)*

**பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து**

# பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று அடையாள பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.30

யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று அனைத்துப் பீட மாணவர்களும் அடையாள பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். பிற்பகல் ஒரு மணிவரை போராட்டம் நடைபெற்றது.

மாணவர்கள் பிரச்சினை தொடர்பாக துணைவேந்தருக்கும், அனைத்துப் பீடாதிபதிகளுக்கும் மாணவர் ஒன்றியம் முன்னர் கடித மூலம் தெரியப்படுத்தியிருந்தது என்றும் -

இக்கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையில் துணைவேந்தரினால் மாணவர் ஒன்றியத்துக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் தமக்கு திருப்திகரமான பதில்களைக் கொண்டிருக்கவில்லை என்றும் - மாணவர் தரப்பில் கூறப்படுகிறது. இதனையடுத்தே மாணவர்கள் நேற்றுப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

துணைவேந்தரும் நிர்வாகமும் தமது கோரிக்கைகளுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் சாதகமான பதிலை அளிக்காவிட்டால் தொடர்ச்சியாக மாணவர் ஒன்றியம் போராட்டங்களை மேற்கொள்ளப்போவதாக எச்சரித்துள்ளது.

மாணவர் ஒன்றியம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ சுகாதார நிலையத்திற்கு வருடாந்தம் 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களே வழங்கப்படுகின்றன. மீதிப் பணம் என்ன செய்யப்படுகிறது?

★ எந்தவித காலதாமதமுமின்றி சுகாதார நிலையத்திற்கு தாதி உத்தியோகத்தரை நியமிக்க இனியாவது ஆவன செய்ய வேண்டும்.

★ உரிய காலத்தில் தேவையான மருந்துப் பொருள்களைப் பெற்றுக் கொடுக்க ஆவன செய்க.

★ பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலைகளுக்கென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற உதவித் தொகை பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலைக்கு வழங்கப்படாமல் எங்கே செல்கிறது?

★ பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலைகள் தொடர்ந்தும் ஒரே நபருக்கு வழங்கப்படுவதன் மர்மம் என்ன? சிற்றுண்டிச்சாலை வழங்கலுக்கு ஏன் கேள்விப்பத்திர முறைமையை நடைமுறைப்படுத்த வில்லை? அது உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

★ ஏனைய பல்கலைக்கழகங்களிலுள்ள விலையில் எமது மாணவர்களுக்கும் தரமான உணவு வகைகளை வழங்க ஆவன செய்யவேண்டும்

★ அனைத்துப்பீட மாணவர் ஒன்றியங்களின் பாவனைக்கு உடனடியாக 'பிக்கப்' வாகனத்தை வழங்க வேண்டும். மேலும் நிர்வாக உத்தியோகத்தர்களின் சொந்தப் பாவனைக்கு வாகனம் வழங்குவதை உடன் நிறுத்த வேண்டும்.

★ பல்கலைக்கழக மாணவர்கள் கல்விச் சுற்றுலாவிற்கும் ஆய்வுகளுக்கும் செல்வதற்கென இரண்டு பஸ்களை உடனடியாக பெற்றுத்தரவேண்டும்.

★ நூல் நிலையத்தை நீண்ட நேரம் மாணவர் பாவனைக்குத் திறக்க வேண்டும்.

★ பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து விளையாட்டு ஆடுகளங்களும் காலையும், மாலையும் பல்கலைக்கழக மாணவர்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட வேண்டும்.

(ஐ-8-9)

# கொழும்புத்துறை, அரியாலை மக்கள் வெகுஜனப் போராட்டத்துக்கு முஸ்தீபு

அரியாலை,ஒக்.30

கொழும்புத்துறை, அரியாலை பிரதேசங்களில் பொதுமக்களின் வாழ்விடங்களில் நிலை கொண்டிருக்கும் படையினர் உடனடியாக வெளியேறி, மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களில் குடியமர வழிவகை செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வெகுஜனப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் கடந்த திங்களன்று நடைபெற்ற ஒன்றியத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அரியாலை, கொழும்புத்துறை பிரதேச வெகுஜன அமைப்புகளின் ஆதரவுடன் பிரதேச மக்களால் இப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வெகுஜனப் போராட்டத்தை நடத்துவதற்கு முன்னர் அது பற்றி கண்காணிப்புக் குழுவுக்கும், படை அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-17)

# 44 இந்திய மீனவர்கள் யாழ். நீதிமன்றில் ஆஜர்

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் நேற்றும் நேற்று முன்தினமும் இரு தொகுதியினராகக் கைது செய்யப்பட்ட 44 இந்திய மீனவர்கள் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரையும் அடுத்த மாதம் 6ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ச.இளங்கோவன், 44 பேரையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் இவர்களது வள்ளங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை உரியவாறு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு காரைநகர் கடற்படைத் தளபதிக்கு கடிதம் அனுப்பி வைக்குமாறு மன்றின் பதிவாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஐ-10)

## அல்லைப்பிட்டியில் பெண் போராளிகள் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சீருடையில் தோன்றும் படத்தை வைத்திருந்த இரு பெண் போராளிகள் அல்லைப்பிட்டிச் சோதனை நிலையத்தில் இருமணி நேரம் தடுத்து வைக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை 8 மணிக்கு தீவகம் நோக்கிச் சென்ற இவர்கள் தமமோடு எடுத்துச்சென்ற தலைவரின் படத்தை தீவகத்துக்குக் கொண்டு செல்ல முடியாது எனத் தெரிவித்த கடற்படையினர் அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் அவர்களை தடுத்து நிறுத்தினர்.

இந்த விவகாரம் உடனடியாக கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர்கள் கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதையடுத்து தலைவரின் படத்துடன் இரு பெண் போராளிகளும் தீவகம் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

(ஐ-3)

## லயன்ஸ் கழக பிரதிநிதிகள் வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.30

லயன்ஸ் கழகங்களின் மாவட்ட ஆளுநர் லயன் றேகன் பிங்கி மற்றும லயன் சீமாட்டி றெபேக்கா பிங்கி ஆகியோர் வலயம் ஒன்றின் லயன்ஸ் கழக 10 ஆவது பிராந்தியத்துக்கு இன்று விஜயம் செய்கின்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று மாலை 6 மணிக்கு சம்பிரதாய நிகழ்வுகள் இடம்பெறும்.

வட்டுக்கோட்டைப் பகுதி தலைவர் லயன் வி.வேலுப்பிள்ளை, கொக்குவில் பகுதித் தலைவர் லயன் பி.சந்திரநாதன், ஊர்காவற்றுறைப் பகுதித் தலைவர் லயன் பி.தேவநாயகம், மானிப்பாய் வட்டத் தலைவர் லயன் எஸ்.சிவநேசன் மற்றும் திருநெல்வேலி வட்ட தலைவர் லயன் கலாநிதி கே. குணராசா ஆகியோர் கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களுக்கு ஆலோசனைக் குழு அமைக்க அரசாங்கம் தீர்மானம்

முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்களின் நலன்களைக் கவனிக்கவும் ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் முழுப் பங்களிப்பையும் இயலச் செய்யும் வகையிலும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், செயன்முறைகளையும் கட்டமைப்புகளையும் பரிசீப்பதற்காகவும் ஆலோசனைக் குழு ஒன்றை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

- இப்படி பிரதமர் அலுவலக அறிக்கை ஒன்று கூறுகிறது.

குழுவுக்கு தலைமை தாங்கும்படி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அழைக்கப்படுவார். வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம் எம்பிக்கள் அனைவரும் குழுவில் இடம்பெறுவர். ஏனைய மாகாணங்களை சேர்ந்த முஸ்லிம் எம்பிக்கள் ஆலோசனைகளை வழங்குவர். இக்குழுவின் செயற்பாடுகளுக்கு உதவும வகையில் தனி அமைப்பு ஒன்று சமாதானப் பணியகத்தில் ஸ்தாபிக்கப்படும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-12)

**ஜனாதிபதி கொலை முயற்சி வழக்கு:**

# கொழும்பு மேல்நீதிமன்றத்திலேயே விசாரணை செய்வதென தீர்மானம்

கொழும்பு நகர மண்டப வளவில நடைபெற்ற குண்டுவெடிப்பு தொடர்பான வழக்கை கொழும்பு மேல்நீதிமன்றத்திலேயே விசாரிப்பதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கை வெலிக்கடை சிறைச்சாலை வளவில் அமைக்கப்பட்டிருக்கும் விசேட நீதிமன்றத்தில் விசாரிக்க அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும், வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் விடுத்த கோரிக்கைகளை ஆராய்ந்த பின்னர் வழக்கு விசாரணையை மீண்டும் மேல்நீதிமன்றத்துக்கே மாற்றுவதென அதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றனர்.

ஜனாதிபதியை படுகொலை செய்ய முயன்றமை, ஏனையோருக்கு படுகாயங்கள் ஏற்படுத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்களின் பேரில் நால்வருக்கு எதிராக இவ்வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

(ஐ)

## நாகர்கோவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ நாகர்கோவில் பகுதியில் உள்ள வீடுகளைப் பார்வையிட மக்கள் பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

★ அம்பன் ஆஸ்பத்திரியை மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ நாகர்கோவில் கொட்டேடைப் பகுதியில் கரை வலை மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டது. அதற்கு அனுமதி வழங்க முடியாது நிலை உள்ளது.

★ மிருசுவில் பகுதியில் தனியாரின் வீடுகளில் இருந்து படையினர் விலகுவர்.

★ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு அருகில் இருக்கும் படை நிலை வாபஸ் பெறபபடும்.

★ குருநகர் தொடர்மாடிக் கட்டடத்தில் கரையோரம் உள்ள வீடுகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர்.

★ பாலையூரில் படையினர் வசமுள்ள 125 வீடுகள் மக்கள் மீளக் குடியமர கையளிக்கப்படும்.

★ நாவாந்துறை வீடமைப்புத் திட்டத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர்.

(ஐ-3-8)

## வலி.வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை, ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் எஸ்.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோரும் மற்றும் பல அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கே.இரத்தின சபாபதி, காங்கேசன்துறை கடற்படை தள அதிகாரி கொமடோர் ஒபயசிங்க, தளத் தளபதிகளான பிரிகேடியர் எதிரிசிங்க, கேணல்களான குணதிலக, ரூபசிங்க, தங்கொட மற்றும் பலாலி இராணுவ அதிகாரி கேணல் வோர் குணவர்த்தன ஆகியோரும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

பல்வேறு விடயங்கள் மாநாட்டில் ஆராயப்பட்டன.

வலி.வடக்கு நிலைமை தொடர்பாக மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி தெரிவித்ததாவது:-

தெல்லிப்பழையில் பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாப்பு நிலைகள் பின்நோக்கி நகர்த்தப்படமாட்டா. அவை தொடர்ந்தும் அப்படியே பேணபபடும். அப்பாதையூடாக தெல்லிப்பழை மகாஜனா, யூனியன் கல்லூரிகளுக்குச் செல்ல முடியும். அந்தந்தக் கல்லூரிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இந்தச் சோதனை நிலையம் ஊடாகச் செல்லமுடியும். பழைய மாணவர்களைச் செல்ல அனுமதிக்க முடியாது.

அந்தக் கல்லூரிகளில் உதைபந்தாட்டம், கிரிக்கெட் போட்டிகள் போன்ற போட்டிகள் நடத்துவதற்கு அனுமதிக்க முடியும். அந்தப் போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் தொடர்பான விவரங்களை முன்கூட்டியே சமர்ப்பிக்க வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

வலி.வடக்கில் விவசாயம் செய்ய விவசாயிகளை அனுமதிக்க வேண்டும என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கோரினார். அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும என்று பிரதித் தளபதி தெரிவித்தார்.

கொழும்புத்துறை விநாயகர் ஆலய வளவில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டிருப்பதாக வெளிவந்துள்ள தகவல் குறித்து மாவை சேனாதிராசா மாநாட்டில் பிரஸ்தாபித்தார்.

இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது

(ஐ-3-8)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உதவிப் பொருள் வழங்க ஏற்பாடு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் உணவுப் பண்டம் அல்லாத பொருள்களை வழங்கவுள்ளது.

இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தினங்களும் வருமாறு:-

நாளை வியாழக்கிழமை -

ஜே-120 தொடக்கம் ஜே-124 வரையிலான பிரிவுகளில் முற்பகல் 10மணிக்கும் ஜே-125 தொடக்கம் ஜே - 128 வரையான பிரிவுகளுக்கு பிற்பகல் 12.30 மணிக்கும் வழங்கப்படும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை - ஜே-102 தொடக்கம் ஜே - 105 வரையான பிரிவுகளுக்கு காலை 10 மணிக்கும் ஜே - 106 தொடக்கம் ஜே-109 வரையான பிரிவுகளுக்கு பிற்பகல் 12.30 மணிக்கும் வழங்கப்படும்.

எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜே - 116 தொடக்கம் 120 வரையாக பிரிவுகளுக்கு முற் பகல் 10மணிக்கு வழங்கப்படும்

எதிர்வரும் 6ஆம் திகதி புதன் கிழமை ஜே-110 தொடக்கம் ஜே-115 வரையான பிரிவுகளுக்கு முற் பகல் 10மணிக்கு வழங்கப்படும்.

கிராமஉத்தியோகத்தர் அலுவலகங்களில் வைத்தே இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் பங்கீட்டு அட்டையுடன் குறிப்பிட்ட இடங்களுக்கு குறித்த நேரத்தில் வரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-180)

## பொஸ்கோவுக்கு கணனிகள் அன்பளிப்பு

யாழ். புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோரால் வித்தியாலயத்துக்கு இரண்டு கணனிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 79 மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர். இந்த 79 மாணவர்களின் பெற்றோர்களே இந்த இரண்டு கணனிகளை வழங்குகின்றனர்.

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன. (ஒ-10)

## நெசவுப் பயிற்சி சான்றிதழ் பெறாதோருக்கு!

கடந்த காலங்களில் தொழில்துறைத் திணைக்களத்தின் நெசவுப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களில் சான்றிதழ்களைப் பெறவிரும்புவோர் நேரிலோ அன்றி கடிதமூலமோ யாழ்மாவட்ட தொழில் துறைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அலுவலர் பி. இராகவன் கேட்டுள்ளார்.

கடிதம்மூலம் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் பயிற்சி பெற்ற நிலையத்தின் பெயர் பயிற்சிக் காலம் என்பவற்றை குறித்து அனுப்புமாறும் அவர் தெரிவித்தார். (ஒ-5)

## பளையில் முதியோர்தினம்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சர்வதேச முதியோர்தினம் இன்று புதன்கிழமை பளை நகரில் இயங்கும் வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை மண்டபத்தில் காலை 10மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதியோர்தினம் சம்பந்தமான போட்டிகளில் வெற்றியீட்டிய பளைக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஒ)


**தொலைபேசி தேவை**

தொலைபேசி இணைப்புத் தேவைப்படுகின்றது. சகல பாகங்களுடனும் இணைந்த சேவை தேவை. வைத்திருந்து விற்க விரும்புவோர் 01.11.2002 வெள்ளிக்கிழமைக்கு முன் உடன் தொடர்புகொள்ளவும்.

இ.சுகந்தன்,
கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.
(10471)


## தலைமைத்துவ தகைமை பயிற்சிநெறி


நெடுந்தீவு,ஒக்.30

வடக்கு - கிழக்கு மாகாணக் கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிராமிய மட்ட தலைமைத்துவ தகைமைப் பயிற்சி நெறி வேலணைப் பிரதேச செயலர் பணிமனையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

## இடம்பெயர்ந்த பச்சிலைப்பள்ளி மக்களுக்கு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டில் ஏனைய பிரதேசங்களில் தற்காலிகமாக வசிப்பவர்களில் தற்போது உலர் உணவு நிவாரணம் கிடைக்காதோர் இன்று புதன்கிழமை புலோப்பளை வீதியருகே இயங்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். வரும்போது தம்வசமுள்ள உலர் உணவுப் பங்கீட்டு அட்டைகளையும் எடுத்துவருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஒ)


**சாயிபாபாவின் பாடல் நூல்**



இலகு ஆங்கில மொழியில் பாபாவின் பாடல்கள்
அடங்கிய 75ஆவது ஆண்டு விழா மலர்
அழகிய வர்ணப் பக்கங்கள் 155இல்
விலை ரூபா 300/= மட்டும்

குறிப்பிட்டளவு நூல்களே கையிருப்பில் உள்ளதால் முந்துபவர்களுக்கு முன்னுரிமை. அனைவரது இல்லங்களிலும் இருக்கவேண்டிய மேற்படி நூலுக்கு தங்களால் வழங்கப்படும் நிதியானது நேரடியாக பாபாவின் இந்தியா அறக்கட்டளை நிதியத்திற்கே உரித்தாகும்.
தங்கள் பிரதிகளுக்கு விரையுங்கள்!
(10065)
கிடைக்குமிடங்கள்:-

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம் அருகில், யாழ்ப்பாணம். | சபேஸ் டிறேடர்ஸ், யாழ்.-பருத்தித்துறை வீதி, புத்தூர் மேற்கு, புத்தூர். |


## கண்ணீர் அஞ்சலி



இணுவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியையும் பழைய மாணவியும் இணுவில் இ.கூ.அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தலைவியும் இணுவை மக்களின் கல்விக் கனவுகளை நனவாக்கியவரும் இணுவை மக்களின் அபிமானியுமாகிய

**திருமதி அன்னலட்சுமி சின்னராஜா**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு இணுவை மக்கள் யாபேரும் பேரதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். அன்னார் எம் சிறார்களின் கல்வி உயர்ச்சியிலும் சமூக முன்னேற்றத்திலும் ஆற்றிய சேவைதனை மறக்கவேமுடியாது.

அன்னாரின் ஆத்மா கல்வி உலகிற்கு ஆறுதல் கூறவும் ஆத்மா சாந்தி பெறவும் எம்முடைய குலதெய்வங்களை பிரார்த்தித்து கண்ணீர்ப்பூக்களை அவர் பாதங்களுக்குக் காணிக்கையாக்குவதோடு பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

இணுவை மக்கள்,
இணுவில் இந்துக் கல்லூரி அபிவிருத்தி சபை,
இணுவில் கல்விச் சமூகம்.
(10058)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா வேலாயுதபிள்ளை

இல.27, விதானையார் வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த நடராசா வேலாயுதபிள்ளை அவர்கள் 28-10-2002 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் சாந்தினி அவர்களின் அன்புக் கணவரும் சுதர்சினி(வவுனியா கல்வியியற் கல்லூரி), நீற்றா பிரியதர்ஷினி(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வினோதன்(பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், அரசனிலை அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(31.10.2002) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27,விதானையார் வீதி,*
*சுண்டுக்குளி.*
(10059)

தகவல்:
திருமதி வே.சாந்தினி
(மனைவி).

## சின்னத்தம்பி கந்தசாமி

**(இளைப்பாறிய ஆசிரியர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்.)**

பழவத்தை, வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வறணன், அச்சுவேலியை வாழ்விடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாசாலை) அவர்கள் மன்னாரில் நேற்று (29.10.2002) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற சரஸ்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகமுத்து - செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளையின் மருமகனும் கணேசநேசன் (விஞ்ஞான பட்டதாரி, லண்டன்), ரேணுகாதேவி (பல் மருத்துவர், நாவலப்பிட்டி), சசிகலாதேவி (மருத்துவர், வவுனியா), குகநேசன் (நிறைவேற்றுப் பொறியியலாளர், மன்னார்), சிவநேசன் (இரசாயனப் பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பொன்னுத்துரை (இளைப்பாறிய ஆசிரியர், திருநெல்வேலி), காலஞ்சென்ற செல்லம்மாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

மன்னாரில் நடைபெறவுள்ள அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிறைவேற்றுப் பொறியியலாளர் விடுதி,*
*கட்டடத் திணைக்களம்,*
*பள்ளிமுனை வீதி,*
*மன்னார்.*
(10063)

தகவல்:
க.குகநேசன்
(நிறைவேற்றுப் பொறியியலாளர்)

## திருமதி பிரான்சிஸ்கா எட்வேட்

மிருசுவிலைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், இளவாலையை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வருபவருமாகிய திருமதி பிரான்சிஸ்கா எட்வேட் 28.10.2002இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை எட்வேட் (பற்றிமா ஸ்ரோர்ஸ், இளவாலை, ஹன்வெல - முன்னாள் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் பவானி (கனடா), றாகினி (கனடா), கிறிஸ்ரி (நோர்வே), போல் (நோர்வே), சாந்தி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மதன் (கனடா), ஜோய் (கனடா), ஜவிதா (நோர்வே), நிதர்சினி (நோர்வே), சுதன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை பொன்னுத்துரை, றோசம்மா (கனடா), மருசலின் (கொழும்பு), சீமாம்பிள்ளை (கனடா), இராணி (கனடா), சூசைப்பிள்ளை (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*'யோகம்ஸ்'*
*தவசிகுளம், மிருசுவில்.*
(C/24571)

தகவல்:
அ.அல்பிரட் யோகம்


**இதோ! யாழ்.நகரில் ஒரு சுயதொழில் வாய்ப்பு!!**
வீட்டில் இருந்துகொண்டே



தொழில் செய்யலாம்! ஆச்சரியமாயிருக்கின்றதா?
எதிர்வரும் 22.11.2002இல் யாழ்ப்பாணத்தில்
புகழ்பெற்ற ஆசிரியர் பரதன் (இந்தியா) அவர்களால் அறிமுகமாகின்றது



**ஸ்கிறீன் பிறின்ரிங்**

ஓய்வுநேரத்திலும் வருமானந் தரக்கூடிய சுயதொழில்

*விவரங்களுக்கு நாடவேண்டிய இடம்:*
*யாழ்ப்பாணத்தில்:*
CAREER COM INSTITUTE
79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பப் படிவங்களை 22.11.2002பெற்று விண்ணப்பிக்கவும்

*கொழும்பில்:*
அர்ச்சனா ஸ்கிறீன் பிறின்ரிங் அக்கடமி
25/4, டாம் வீதி கொழும்பு-12. ☎ 01 434070
(10040)



**யாழ்.மக்களுக்கு அரியதொரு வாய்ப்பு!**

# மாபெரும் மலிவு விற்பனை

தித்திக்கும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
சகலவிதமான ஜவுளித் தினுசுகளையும் மிக மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
வாருங்கள்! வாருங்கள்!!

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**

77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2469
(C/24553)



# யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்

# நூற்றாண்டு சிறப்பு மலர் 1902 - 2002

## அமைச்சரின் ஆசி

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்" என்பதற்கிணங்க சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் யாழ்.மண்ணின் பழைமையும் பெருமையும் கொண்டது யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் ஆகும். நாட்டின் குழப்பங்களுக்கு மத்தியிலும் கல்விச்சாலைகளில் தானும் ஒன்று என இதன் நூற்றாண்டுகளும் அதன் வரலாறுகளும் கட்டியங் கூறி நிற்கின்றன. வடபுலத்தின் இந்து பாடசாலை வரிசையில் உள்ள வித்தியாலயத்தின் சமூகம் மகிழ்ந்திருக்கும் இவ்வேளையில் இதன் பணிகள் சிறந்து மேலோங்க வாழ்த்துவதுடன், இது ஓர் இந்து வித்தியாலயம் என்ற வகையில் நல்லாசிகள் வழங்கி வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

**திரு.தியாகராசா மகேஸ்வரன் எம்.பி.**
*இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர்.*



பாடசாலை அதிபர்

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் நூறு ஆண்டுகள் நற்கல்விச் சேவையைப் பூர்த்திசெய்துள்ளது. அமைதி நிலவும் சூழலில் நற்சேவையை வழங்கி தரம் 1-5வரை ஆரம்பித்து படிப்படியாக வளர்ச்சி பெற்று தரம் 1-9வரை தரமுயர்த்தப்பட்ட ஒரு கல்லூரியாக வளர்ந்துள்ளது. அண்மையிலுள்ள பெரிய பாடசாலைகளுக்கு தரமான மாணவர்களை அனுப்புவதுடன் ஒவ்வோர் அம்சத்திலும் முன்னேறி வந்துள்ளது. அண்மைக் காலங்களில் பௌதிக வளங்களைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி செ.மகாலிங்கம்**
*வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.*

## மேலதிக அரசாங்க அதிபரின் நல்வாழ்த்துக்கள்

உயர் சிந்தனையுடன் ஆரம்பிக்கும் எக்காரியமும் வீண்போவதில்லை. யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செயற்பாடுகள் அக்காலத்தில் பலரை சிந்திக்க வைத்தது. இதன்காரணமாக வண்ணார்பண்ணை வடக்கைச் சேர்ந்த அமரர் இளையதம்பியின் சிந்தனையின் வெளிப்பாடாக ஒரு சிறிய பாடசாலையை மதவடி ஒழுங்கையில் ஆரம்பித்தார். இது குளங்கரைப் பள்ளிக்கூடம் என்ற காரணப் பெயருடன் இன்றும் இயங்கிவருகிறது. 1902இல் ஆரம்பித்த கல்விப் பயணத்தில் பாடசாலைச் சுற்றுப்புறத்தைச் சேர்ந்த அனைவரும் இங்கு கல்விகற்று உயர்ந்து நிற்பதுடன் உயர்பதவியிலும் உள்ளனர். இவர்கள் பாடசாலையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் உதவிக் கரங்களை நீட்டி, பணியாற்றவேண்டிய காலமிது. பாடசாலையைச் சுற்றியுள்ள வசதி படைத்தவர்கள் ஒன்றுசேர்ந்து நூற்றாண்டையும் தாண்டி சிறப்புடன் இயங்க உதவ வேண்டும். இப்பாடசாலை மேன்மேலும் சிறப்புற என் நல்வாழ்த்துக்கள்.

**து.வைத்திலிங்கம்**
*மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம்.*

## பிரதேச செயலரின் வாழ்த்து

எமது பிரதேச சபைக்கு உட்பட்ட வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள இவ்வித்தியாலயம் 1902இல் ஆரம்பித்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் தனது கல்விப் பணியை சிறப்புடன் ஆற்றிவருகிறது. அயலில் பெரிய பாடசாலைகள் இருந்தும் தரம் 1-9வரை மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கி நூற்றாண்டு விழாவைக் காணும் இப்பாடசாலை அதிபர், ஆசிரியரைப் போற்றுவதுடன் மேலும் சிறந்த சேவையாற்ற இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**நா.வேதநாயகன்**
*பிரதேச செயலர், நல்லூர்.*

## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் செய்தி

யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் நூற்றாண்டு விழாவைக் காணும் இவ்வேளை பல்வளமும் பெற்று மேன்மேலும் வளர பாடசாலைச் சமூகம் உழைக்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**திருமதி ச.காங்கேயன்**
*கோட்டக்கல்விப் பணிப்பாளர்.*

## பாடசாலை வரலாற்றுச் சுருக்கம்

1902ஆம் ஆண்டு மிஷனரிமார் பாடசாலைகள் அமைத்த காலத்தில், இது இந்து சமய பாடசாலையாக நாச்சிமார் கோயிலுக்கு அருகில் செல்லப்பா இளையதம்பியினால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு இந்து சபை (Hindu Board) ஆதரவும் இருந்தது. இதன்பின் மதவடி ஒழுங்கையில் தனது காணியில் ஓலைக்கொட்டில் அமைத்துத் தானே முகாமையாளராக இருந்து 1911வரை பாடசாலையை நடத்தினார். இக்காலத்தில் இதன் பெயர் ஞானானந்த வித்தியாசாலை. 1911இல் அரச நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டது. 1912இல் இதன் பெயர் தட்டாதெரு இந்து த.க.பாடசாலை எனப் பெயரிடப்பட்டது. 1965வரை தரம் 1-11வரை வகுப்புகள் இருந்தன. 1952இல் அரசு பொறுப்பேற்றது. அதிபர் நிர்வாகம் ஆரம்பமானது. 1964இல் சிமெந்தினால் கட்டப்பட்டது. 1965 - 1985வரை தரம் 1 - 5வரை வகுப்புகள் இருந்தன. 1983இல் இளையதம்பி இந்து தமிழ் கலவன் பாடசாலை என பெயர் மாற்றப்பட்டது. 1983 - 85 காலப்பகுதியில் தரம் 6, 7, 8 வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. 1991இல் தற்போதைய அதிபர் பொறுப்பேற்றபின் 1992இல் கழுத்துப்பட்டி அணிதல், பாடசாலை கீதம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டது. 1993இல் இளையதம்பி இந்து வித்தியாலயம் (E.H.V.) என பெயர் மாற்றப்பட்டது. கலையரங்கு மேடை அமைக்கப்பட்டது. 1997இல் முறைசாராக் கல்வித் திட்டத்தில் தையல் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டது. 1998இல் மாணவர் செயற்பாட்டறையும், 1999இல் சுகாதார வசதிகள் G.T.Z. உதவியுடன் அமைக்கப்பட்டன. 01.01.2000இல் தரம் 9 ஆரம்பிக்கப்பட்டது. 2001, 2002இல் புதிய வகுப்பறை, மதில் மற்றும் பௌதிக வளங்கள் விருத்தி செய்யப்பட்டது. 1992இன் பின்னர் எல்லாத் துறைகளிலும் பாரிய வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதிபர்
*யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலயம் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

## வித்தியாலய அதிபரின் வாழ்த்துச் செய்தி

யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவை அடியேனின் சேவைக்காலத்தில் கொண்டாட இறையருள் கிடைத்ததையிட்டு மனமகிழ்வு அடைகின்றேன். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த மேலும் வளர்ச்சியடையக் கூடிய இதன் சேவை பாரெங்கும் பறைசாற்றி நிற்கும் இக்காலத்தில் இங்கு கல்வி கற்றவர்களும், பாடசாலைச் சமூகமும் நூற்றாண்டின் பிறகாயினும் இதன் வளர்ச்சியை ஒருகணம் சிந்திக்கவேண்டும். சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டுமென்ற நோக்கோடு ஆரம்பித்த பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியடைய மனமார வாழ்த்துகின்றேன்.

**திரு.மு.செல்லையா**
*அதிபர்*

## பாடசாலை அபி.சங்க செயலரின் வாழ்த்துச் செய்தி

குளத்தின் கரையாக இதன் அமைவிடம் இருந்தமையால் குளங்கரைப் பாடசாலை என்ற காரணப் பெயரையும் உடைய பெரியார் இளையதம்பியின் பெருமுயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் தற்போதைய அதிபரின் அளப்பரிய சேவையினால் வளர்ச்சியடைந்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருப்பது பாராட்டுக்குரியது. சகலரினதும் உதவியுடன் மேலும் வளர்ச்சியடைய அபிவிருத்திச் சங்கம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

**செயலர், பா.அ.சங்கம்.**

## பழைய மாணவர் சங்க வாழ்த்துச் செய்தி

அன்று குளங்கரை என்று ஆரம்பமாகி இன்று கலங்கரை விளக்காக நிற்கின்ற வித்தியாலயம், ஞானானந்த வித்தியாசாலை, தட்டாதெரு த.க.பாடசாலை, இளையதம்பி இந்து வித்தியாலயம் என்ற பெயர்களைத் தாங்கி வந்து நூற்றாண்டு விழாவைக் காண்கின்றது. பல கல்வியாளரை உருவாக்கிய பெருமைபெற்ற பாடசாலையை பழைய மாணவர் சார்பாக வாழ்த்துவதுடன், பாடசாலை வளர்ச்சியில் அக்கறையோடு செயலாற்றுகின்ற அதிபரையும் கல்வி கற்பித்த அத்தனை ஆசான்களையும் மனமார வாழ்த்துகின்றேன்.

**பழைய மாணவர் சங்கம்.**

## கல்வி போதித்திடும் கலைக்கூடம்

கற்றோர் போற்றி நிற்கும் கல்விச்சாலையிது
கல்வி போதித்திடும் நல்ல கலைக்கூடமாம்
பெற்றோர் விரும்பி நாடும் வித்தியாலயமிது
இளையதம்பி நாமங்கொண்ட பள்ளிக்கூடமாம்
மற்றோர் பலரும் மதிக்கும் மாண்புமிகு
அதிபரின் அயராத உழைப்பினால் உயர்ந்த
உற்றோர் வாழ்த்த நூற்றாண்டு காணும்
உயர் வித்தியாலயம் வாழ்க பல்லாண்டே!

**கவிமணி இராசையா ஸ்ரீதரன்**
*நாச்சிமார் கோயிலடி.*


### வாழ்த்துவோர்:

**வினோ நகைப்பூங்கா**
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**அழகிய ஓவ்செற் பிறின்டிங் வேலைகளுக்கு அதிசிறந்த ஸ்தாபனம்**
**தாரணி பதிப்பகம் அன் ஆட்ஸ்**
319, கே.கே.எஸ். வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.

**கவியரசு நகைப்பூங்கா**
190, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ அம்பாள் எலற்றிக்கல்ஸ்**
1039, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**திரு.சாம்பசிவம் ஜனகன்**
ஸ்காபறோ மோட்டோர்ஸ்,
கனடா.

**நவீனரக பட்டுப்புடவைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்**
**மகாநதி புடவையகம்**
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 4, நவீன சந்தை, சாவகச்சேரி.
T.P.: 222 2552

**புவனேந்திரன் நகைத்தொழிலகம்**
58, கஸ்தூரியார் வீதி... 58, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

**சரவணமுத்து கந்தசாமி அன் சன்**
**நகைத்தொழில் சாலை**
**தொலைத்தொடர்பு சேவை**
947, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

**வேணுகா**
**தொலைத் தொடர்பு நிலையம்**
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(சி-24533)

**நவீன அழகிய எழுத்துக்களினால் கவர்ந்திழுக்கும் அழகிய அச்சு வேலைகளுக்கு நாடுங்கள்:**
**ஹரிஹரணன் பிறின்டேஸ்**
424A, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

## ஜனாதிபதி மீது அரசின் இரண்டாவது கணை!

சமாதானம் வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வாய்ஓயாமல் கூறிவருகிறார்.

தாமே சமாதான முயற்சிகளுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் என்றும் தற்போதைய அரசாங்கம் தமது வழியிலேயே சமாதான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது என்றும் அவர் பெருமை அடிக்கவும் செய்கிறார்.

அதேவேளை, அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தக் கூடிய விதமாகவே அவர் நடந்து வருகிறார்.

இப்போது அரசாங்கம் புலிகளோடு நடத்திவரும சமாதானப் பேச்சுகள் பற்றித் தமக்குச் சரியாகத் தகவல்கள் தரப்படுவதில்லை; தம்முடன் கலந்து ஆலோசனை நடத்தப்படுவதில்லை; நாட்டின் ஜனாதிபதியாக இருந்தும் தாம் புறக்கணிக்கப்படுகிறார் என்றெல்லாம் ஜனாதிபதி குற்றம் சாட்டுகிறார்.

சமீபத்தில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளில் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பாததைப் புலப்படுத்தினார். சமாதானத்துக்குப் புதிய திட்டத்தை உருவாக்கி எல்லோரும் இணைந்து அதை நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பதற்கு அனைவரையும் தம்முடன் அணிதிரளுமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

ஆக, சமாதானம் என்றால் அதை வேறு யாருமல்லர்; தாமே கொண்டு வரவேண்டும் என்று ஜனாதிபத விரும்புகிறார்.

அதனால், தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை ஜனாதிபதி எந்த நேரத்தில் எந்த நடவடிக்கைமூலம் முடமாக்கி விடுவாரோ என்ற அச்சம் அரசாங்கத்துக்கு அடி மனதில் எப்பொழுதும் இருந்து வருகிறது.

அதனால்தான் அவரோடு இணைந்து செயற்பட முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

ஒரு வருடத்தின் பின்னர் தமது விருப்பம்போல் எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை அரசமைப்புச் சட்டம் ஜனாதிபதிக்கு வழங்கியிருக்கிறது.

இது தனது தலைக்கு மேல் சதா தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி என்பதை அரசாங்கம் உணர்ந்துதான் ஜனாதிபதியின் இந்த அதிகாரத்தை நீக்குவதற்கு 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்தது.

அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் விதத்தில் கட்சிகளின் கட்டளைக்கு அப்பால் எம்.பிக்கள் தமது மனச்சாட்சிப்படி அந்தத் திருத்தத்துக்கு வாக்களிக்கலாம் என்ற விதியையும் அரசு புகுத்தியிருந்தது.

அந்த விதி அரசமைப்புக்கு முரண் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது. அத்துடன் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் மட்டும் போதாது. சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் அங்கீகாரமும் பெறப்படவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது.

அதனால், அரசாங்கம் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு ஜனாதிபதி மீது தொடுத்த இரண்டாவது கணையில் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது.

முப்படைகளின் சீரமைப்பு என்ற பெயரில் முப்படைகள் மீதும் தளபதி என்ற வகையில் ஜனாதிபதிக்கு இப்போதுள்ள முழு அதிகாரங்களையும் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைப்பதுதான் ஜனாதிபதிக்கு எதிராக அரசாங்கம் தொடுத்துள்ள இரண்டாவது கணை.

முப்படைகளின் மறுசீரமைப்பு அவசியம் என்று அரசு நியமித்த குழு ஒன்று விதந்துரைத்திருக்கிறது. அந்த விதந்துரை நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதியோடு பிரதமரும் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தார்.

முப்படைகளின் மறுசீரமைப்புக் குறித்து தமது முடிவைத் தெரிவிப்பதற்கு ஜனாதிபதி இரண்டு வார கால அவகாசம் கேட்டிருக்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன.

அரசாங்கத்தின் இந்த இரண்டாவது கணையும் எதிர்பார்க்கப்படும் பலனைக் கொடுக்கத் தவறினால், சமாதான முன்னெடுப்புகள் தொடர்ந்து பாதிக்கப் படும். அதனால், நாட்டுக்கும் மக்களுக்கும்தான் நட்டம். மொத்தத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் ஒத்துப்போவதுதான் இலாபம்.

# துறைமுகத் தொழிலாளர்களுக்கு கொடுப்பனவை உடனே வழங்குக!

## யாழ்.அரச அதிபருக்குக் கடிதம்

வடமராட்சி,ஒக்.30

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்குரிய கடந்த ஒருமாதகால கொடுப்பனவு இன்னமும் வழங்கப் படவில்லை.

கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் தொழிலாளர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள், இறக்கும் பணியை மேற்பார்வையிட்டு செயற்படுத்தும் ஊழியர்கள் ஆகியோருக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதிக்கும் இம்மாதம் 18ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நான்கு கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டதற்கான சம்பளக்கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை.

இது குறித்து கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்கும் தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் யாழ்.அரச அதிபருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:-

'கடந்த ஒருமாத காலமாகக் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள எமது சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு சம் பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இதனால் அண்மைக்காலத்தில் எமது சங்கம் ஒருலட்சம் ரூபா வைக் கடனாகப் பெற்று இத்தொழிலாளர்களுக்கு சம்பள முற்பணமாகக் குறைந்த தொகையை வழங்கியுள்ளது. மேலும் கடன் பெற்று இவர்களுக்குக் கொடுப்பனவை வழங்க இயலாமலுள்ளது.

இன்னும் சில தினங்களில் தீபாவளித் தினம் கொண்டாடப் படவுள்ளது.

ஆகவே தொழிலாளர்கள் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் தீபாவளியைக் கொண்டாட வசதியாகச் சம்பளக் கொடுப்பனவைத் தாமதமின்றி வழங்குமாறு வேண்டுகிறோம் என அக்கடிதத்திலுள்ளது. (ஒ-173)

### தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாட்டால்

## ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பினருக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள்

### விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாடு செய்துவருகிறது.

இக்கருத்தரங்குகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் துறைசார் முன்னணி ஆசிரியர்கள் பங்கேற்று மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

மாணவர்களுக்கு அதிக பயன்களை வழங்கக்கூடிய இந்த வழிகாட்டல் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்களுக்கு யாழ்.பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் காரியாலயத்தில் இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மாணவர்கள் இந்தப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து அடுத்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது காரியாலயத்தில் சேர்ப்பிக்கும்படி மாணவர் பேரவை கேட்டுள்ளது.

கருத்தரங்குகள் குறித்த நிகழ்ச்சி நிரல் பின்னர் அறிவிக்கப் படும். (ஒ)

### தமிழக, குடாநாட்டு மீனவர்கள்

## கைப்பற்றிய மீன்பிடிவலைகளை பரஸ்பரம் பரிமாற நடவடிக்கை!

### சமாசத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.30

இலங்கைக் கடற்பரப்பில் போடப்பட்டிருந்த மீன்பிடிவலைகளில் குடாநாட்டு மீனவர்களும் தமிழக மீனவர்களும் பரஸ்பரம் கைப்பற்றிக்கொண்ட வலைகளை உரியவர்களிடம் பரிமாறிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இத்தகவலை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.கடலில் எமது மீனவர்களால் போடப்பட்டிருந்த ஏராளமான மீன்பிடி வலைகளை, தமிழ்நாட்டு மீனவர்கள் வெட்டி எடுத்துச்சென்றுள்ளனர். இவற்றை அங்கிருந்து மீட்டெடுப்பதற்காகத் தமிழக மீனவர் சமாசங்களுடன் விரைவில் பேச்சு நடத்தப்படும்.

அதேவேளை - இலங்கைக் கடற்பரப்பில், இந்திய மீனவர்களால் போடப்பட்டிருந்த பெருமளவு மீன்பிடி வலைகளை குடாநாட்டு மீனவர்கள் எடுத்துவந்துள்ளனர். அவ்வாறு எடுத்து வரப்பட்ட மீன்பிடி வலைகளை அவ்வப்பகுதி மீனவர் சங்கங்கள் பொறுப்பேற்று பாதுகாப்பாகப் பேணவேண்டும்.

சுமுகமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், இரு தரப்பு மீனவர்களும் தத்தமது மீன்பிடி வலைகளை பரிமாறிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-9)

## சட்டவிரோத மின் பாவனையே மின்தடங்கலுக்குக் காரணம்!

### தடுக்க உதவுமாறு அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.30

சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதாலேயே மின் விநியோகத்தில் அடிக்கடி தடங்கல் ஏற்படுகிறது. இதனைத் தடுக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

- இவ்வாறு மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புறநகர்ப் பகுதிகளில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சட்டவிரோத மின்பாவனை காரணமாக மின்சாரத்தால் ஏற்படும் விபத்துக்களும் அதிகரித்துள்ளன. முறை யற்ற மின்பாவனையைத் தடுக்க பொதுமக்கள் மட்டுமன்றி கலாசாரத்தைப் பேணு இளைஞர்களும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு அந்த அதிகாரி மேலும் கோரியுள்ளார்.(ஒ-9)

**நாளை**

ஐப்பசி 14
வியாழக்கிழமை
(31-10-2002)
திதி: தசமி
பிற்பகல் 2.26 வரை.
நட்சத்திரம்: மகம்
பிற்பகல் 1.5? வரை.
சுபநேரம் : 7.33 - 9.03
ராகுகாலம் : 1.13 - 3.03
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தேசத்துக்காகப் பாடுபடுபவர்கள் பொதுமக்களுடன் பகிர்ந்துகொள்ளமுடியாத எதனையும் பெறக் கூடாது.

## குடாநாட்டில் எரிபொருள் விலை குறைவதற்கு வாய்ப்புண்டாம்!

### கூட்டுத்தாபன அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.குடாநாட்டில் எரிபொருள்களின் விலைகள் குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் ஜே.ஏ.அந்தோனிப்பிள்ளை தெரிவித்தார்.

தற்போது பெற்றோல் தரைப் பாதைவழியாக தனியார் வாகனங்களில் எடுத்துவரப்படுகிறது. இதற்குப் பதிலாக குடாநாட்டுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகனங்களில் பெற்றோல் எடுத்துவரப்பட்டால் தனியார் வாகனங்களுக்கான மேலதிகச் செலவினங்கள் குறைய வாய்ப்புண்டு. பெற்றோலியக் கூட்டுத்தாபன வாகனங்களில் எரிபொருள்களை எடுத்துவர அனுமதியும், பாதுகாப்பு உத்தரவாதமும் கிடைத்தால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது சொந்த வாகனங்களில் குடாநாட்டுக்கு எரிபொருள்களை எடுத்துவரும் - இவ்வாறு வடபிராந்திய முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

பெற்றோல் தவிர்ந்த மண்ணெண்ணெய் மற்றும் டீசல் போன்ற எரிபொருள்கள் தற்போதும் கப்பல்மூலமாகவே இங்கு எடுத்துவரப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ-9)

## டிரக்-ஓட்டோ-மோ.சைக்கிள் மோதியதில் இருவர் படுகாயம்!

### கொக்குவில் பகுதியில் விபத்து

யாழ்ப்பாணம்,ஒக்.30

இராணுவ டிராக் வண்டி - ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்திற்குள்ளானதாகக் கூறப்படும் ஒரு சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொக்குவில், பூநாறி மரத்தடியில் இடம்பெற்ற இவ்விபத்தில் மகாஜனக் கல்லூரி ஆசிரியர்களான மங்களம் மணிசேகரம் (வயது-38), வேதநாயகம் ஜோன்சன் (வயது-37) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். காங்கேசன்துறை வீதியால் தெல்லிப்பழை நோக்கி தனியார் பயணிகள் பஸ் ஒன்றும் இராணுவ டிரக்கும் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்தன என்றும் -

டிரக் வண்டிக்கு முன்னால் வந்து கொண்டிருந்த பயணிகள் பஸ் பூநாறி மடத்தடியில் பயணிகளை இறக்குவதற்காக நிறுத்தப்பட்ட போது பின்னால் வந்த இராணுவ டிரக் பஸ்ஸை முந்திக்கொண்டு செல்ல முற்படுகையில் எதிரே வந்துகொண்டிருந்த ஓட்டோவுடன் மோதியதாகவும் -

அதேசமயம் ஓட்டோவுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த மோட்டார்சைக்கிள் ஓட்டோவுடன் மோதியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இவ்விபத்தினால் ஓட்டோவுக்கு பலத்த சேதம் ஏற்பட்டபோதும் அதில் பயணம் செய்தவர்கள் காயம் எதுவுமின்றித் தப்பினர். ஆனால், ஓட்டோவுக்குப் பின்னால் வந்து விபத்துக்குள்ளாகிய மோட்டார்சைக்கிளில் பயணஞ்செய்த இருவருமே படுகாயமடைந்தனர். (ஒ-5)

## மாநகராட்சிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.மாநகர சபை உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்.மாநகரசபை இந்து விடுதியில் மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

## வீதியில் கிடந்த 5 அடி முதலை கடலுக்குள் விடப்பட்டது

### சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி,ஒக்.30

வீதியில் சோர்ந்துபோய்க்கிடந்த, சுமார் ஐந்து அடி நீள முதலையைப் பிடித்த பொதுமக்கள் அதனை, தற்போது கடற்றொழிலுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள கடற்பகுதியில் விட்ட சம்பவம் நேற்று சாவகச்சேரி கச்சாய் வீதி புனித விக்டோரியார் தேவாலயப் பகுதியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு சோர்வடைந்த நிலையில் கச்சாய் வீதியில் கிடந்த முதலையை அப்பகுதி மக்கள் பிடித்து கட்டி வைத்திருந்தனர். பின்னர் நேற்றுப் பகல கடலில் அதனை விட்டனர்.

2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களினால் மக்கள் இடம் பெயர முன்னர் காணப்படாத முதலைகள் தென்மராட்சியில் தற்போது காணப்படுகின்றன. (ஒ-117)

# இந்திய றோலர்களால் மீன்பிடி வலைகள் நாசம்!

வடமராட்சி,ஒக்.30

பாக்குநீரிணைக் கடலில் அடுத் தடுத்த இரு நாள்களில் குடாநாட்டு மீனவர்களுக்குச் சொந்தமான 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 வலைகள் இந்திய மீனவர்களின் றோலர்களினால் அறுத்துச் சேத மாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் இவ்வாரம் இள வாலை மாரிசன் கூடல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த அ.ஜேசுதாசன் என்பருக்குச் சொந்த மான வலைகளே இரு தினங்களும் இந்திய மீனவர்களின் றோலாகளி னால் அறுத்து அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. முதல நாள் 6 வலைகளும் அடுத்தநாள் 4 வலைகளுமாக 10 வலைகள் இவ வாறு அறுத்துச் சேதமாக்கப்பட்டுள் ளன என்று சம்பந்தப்பட்ட மீனவர் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளா கூட்டுறவுச் சங்கச் சமாசத்திடம் முறையிட்டிருக்கிறார். (ஐ-173)

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 19 - 11 - 1930



உதிர்வு 24 - 10 - 1997

## அமரர் கா.இரத்தினம் (சபா)

ஆண்டு ஐந்து சென்றதப்பா
ஆறவில்லை எங்கள் துயர்!
இல்லத்தில் நிழல் மரமாய்
இன்பமாய் வாழ்ந்தோம் உம் நிழலில்
ஈவிரக்க மில்லாமல்
ஈஸ்வரனார் எம்மைப் பிரித்து விட்டார்
உங்கள் நினைவால்
உருகுகின்றோம் எந்நாளும்!

பிரிவால் வாடும்:
மனைவி, மகன்மார், மகள்மார்,
மருமகள்மார், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்.

நுணாவில் கிழக்கு,
கல்வயல், சாவகச்சேரி.

(9827)


மகாநதியின் தீபாவளிப் பரிசு

யாழ்ப்பாணத்தில்...
சாவகச்சேரியில்...

உங்கள் தீபாவளியை
இம்முறை மகாநதியுடன் கொண்டாடுங்கள்!

ஆடவரின் அந்தப்புரம்
ஆடையுலகில் ஓர் அற்புதம்!
மங்கையரின் ஆடைக் களஞ்சியம்!

சிட்டுகளின் சிங்காரச் சோலை!

நவநாகரிக தோற்றத்துக்கான புடைவைகளின் சங்கமம்!

மகாநதி புடைவையகம்

முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான இடம்

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ்களுக்கு பிரத்தியேகக் காட்சியறை!

222 2552
16, நவீனசந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(C/24499)



சுடர் ஒளி

29-10-2002 இதழில்

விலை -14/-


ஒக். 29 நவ. 04, 2002
சுடர் ஒளி
THE SUDAR OLI
வார மலர்
வன்னியில் உயர் மட்டச் சந்திப்பு

குடாநாட்டில் மீண்டும் ஊளித் குடுமிடிக்கும் தலைவிவகாரம்

பேச்சுக் களத்தில் பிரபா இறக்கியுள்ள அமர்க்களமாடிய இரு - இளஞ்சிங்கங்கள்

முஸ்லிம் காங்கிரஸ் நெருக்கடி தீர்வில் ஹக்கீம் தீவிரம்

அரசியல் நெருக்கடியால் பின்னடைவை எதிர்நோக்கும் கைதிகள் விவகாரம்

தடாமற்றத்தைத் தடுக்கும் சட்டத்தை ஜெயலலிதா கையில் எடுத்தது ஏன்?

இருதய வியாதி, பாரிசவாதம் ஏற்பட உயர் இரத்த அழுத்தமும் காரணம்.

சைக்கிள் ஓடக் கற்றுக்கொள் நகைச்சுவை விருந்து

கொலை! பிணம்!! பணம்!!! க்ரைம் டயறி

ஊரே திருந்தி விட்டாலும் அரட்டைக்கு ஆள் இருக்கு. (தொடர்)

மற்றும் அரசியல் அம்பலம் அலைகளின் காவியம், சிறுகதை, குறுங்கதை, சிறுவர் பகுதி உட்பட பல்வேறு அம்சங்கள்.

வாசிப்போரும் நெஞ்சங்களை யோசிக்கவைக்கும் ஒரே ஒரு பத்திரிகை!

# வாசகர் திருமுகம்

## சித்தியடைந்தோரின் நிலைமை என்ன?

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்சார் கற்கை நெறிகளை (Professional Courses) பூர்த்தி செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படல் அவசியமானது. பலகலைக்கழகத்துக்கு அடுத்த நிலையாக விளங்குவது தொழில் நுட்பக் கல்லூரி ஆகும். எனவே தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று இறுதிப் பரீட்சை சித்தியடைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படல்வேண்டும்.

இவ்வகையில் ஆங்கில மொழி மூலம் (English Medium)கற்று கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து சித்தி பெற்றவர்களை விசேடமாக கவனத்தில் எடுத்தல் வேண்டும். யா/தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு சில கற்கை நெறிகள் மட்டுமே ஆங்கில மொழி மூலம் இருந்து வந்தன. (உதாரணம் தேசிய கணக்கீட்டு தொழில்நுட்ப வல்லுநருக்கான சான்றிதழ் N.C.A.T.)

எனவே, ஆங்கில மொழிமூலம் கடந்த கால வருடங்களில் இறுதியாக கல்வி கற்று சித்தி பெற்றவர்கள் சிலரே. இவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் தகைமைகளுக்கு ஏற்றவாறு அரச-தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்க தொழில்நுட்பக் கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகிறோம்; இதனால் இனிவரும் காலங்களில் மாணவர்கள் ஆங்கில மொழி மூலக்கற்கை நெறிகளை பயில்வதற்கு இது தூண்டுகோலாகவும் அமையும்.

ஆகவே, தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்து சித்தியடைந்தும் இதுவரையில் வேலைவாய்ப்பின்றியும் வறுமைக் கோட்டின் கீழும் இருப்போருக்கு முன்னுரிமைப்படி வேலைவாய்ப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள வலயம் 4இன் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளரையும் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் மற்றும் ஏனைய தொழிற்றுறை சார் அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாக
*யாழ்ப்பாணம்.* **எஸ்.பி.ஆர்.சுதன்**

## கண்மூடி மௌனம் ஏன்?

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தால் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்த பொன்னாலை மேற்குப் பகுதியில் வசிக்கும் பல நூற்றுக் கணக்கான குடும்பங்களாகிய நாம், இதுவரை மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. பன்னிரண்டு வருட காலமாக பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்ற நாம், அயற்கிராமங்களில் உள்ள வன்னி சென்றவர்களின் வீடுகளிலும் காணிகளில் சிறு கொட்டில்கள் அமைத்து வாழ்ந்து வருகின்றோம். தற்போது வன்னி சென்றவர்கள் திரும்பிக் கொண்டிருப்பதால் வீடுகளை விட்டும் காணிகளில் இருந்தும் வெளியேறுமாறு கூறுகிறார்கள். நாம் எங்கே செல்வது?

இதுவரை எந்தவோர் அமைச்சரோ எம்.பியோ வந்து எமது மக்களின் கஷ்டங்களைப் பார்த்தது இல்லை. எம்மை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கும்படி கண்காணிப்புக் குழு, அமைச்சர் தி.மகேஸ்வரன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், முன்னாள் அரச அதிபர் க.சண்முகநாதன் ஆகியோருக்கு கடந்த 7.5.2002 அன்று மகஜர்கள் அனுப்பினோம் இதுபற்றி அவர்கள் நாடாளுமன்றிலோ வேறு எங்கேயாரோ எடுத்துக்கூறியதாக நாம் அறியவில்லை.

மாதகல் மேற்கு மக்களை மீளக்குடியமர்த்த அப்பகுதி கடற்படை அதிகாரியுடன் கலந்துரையாடப் போவதாகக் கூறும் கூட்டமைப்பு எம்.பி ரவிராஜ் அந்தச் சந்தர்ப்பத்தில் பொன்னாலை மேற்கு மக்களாகிய எமது நிலை தொடர்பாகவும் கேள்வி எழுப்புவாரா?

*பொன்னாலை* **என்.சங்கர்**

## பல்லின முரண்பாட்டுத் தீர்வை இலகுவாக்க ஆலோசனைகள்!

இலங்கை பல்லின சமுதாயங்களைக்கொண்ட நாடு ஆயினும், இனமுரண்பாட்டு யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவை தமிழ் - சிங்கள இனங்களே! இருப்பினும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று எட்டப்படும்போது சமகாலத்தில் ஏனைய சமூகங்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவேண்டுமென்பதில் மறுகருத்துக் கிடையாது, ஆயினும் மேற்படி தீர்வில் சில குழப்பங்களை தவிர்க்கும் பொருட்டு பின்வரும் கருத்துக்களை 'வாசகர் திருமுகத்தி'னூடாக பகிர்ந்துகொள்ள விளைகின்றேன்.

முதலில் இலங்கையின் நாடாளுமன்று மட்டுமே மக்களையாளும் முதன்மைச் சபை(ஒற்றையாட்சி) என்பதுடன், வெறும் அதிகாரப் பரவலாக்கல் நடைமுறைகள் முற்றாக ஒழிக்கப்பட்டு கூட்டாட்சி சபையாக இலங்கை நாடாளுமன்று உருவாக்கப்படவேண்டும் - இதன்மூலம் பிறநிர்வாக அலகுகளை எதிர்காலத்தில் சட்ட இயற்றல்கள்மூலம் இல்லாதொழிக்கும் வாய்ப்பை நாடாளுமன்றம் இழக்கும். இதுவே தாயகக் கோட்பாடாகும்.

அடுத்ததாக இலங்கை முழுவதும் பரந்து வாழும் முஸ்லிம் இன மக்களின் தீர்வாக, நாடாளுமன்றமன்றுக்குக் கீழ்ச்சபையாக எல்ல முஸ்லிம் மக்களையும் ஒன்றிணைக்கும் பொதுச்சபை ஒன்றை உருவாக்கி அவர்களால் சுயமாக உருவாக்கும் சட்டங்களை, பிறநிர்வாக அலகுகளூடாக நடைமுறைப்படுத்த வழிசமைப்பதுடன், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேச அரச காணிகளையும் பிறவிடயங்களையும் அவர்களே நிர்வகிக்கும் வகையில் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும். அத்துடன் வேலைவாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் எல்லா நிர்வாக அலகுகளூடாகவும் விதாசாரம் பேணப்படவேண்டும்.

மற்றையது; இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டு அவர்களும் இந்நாட்டில் நிம்மதியாக வாழ, அதிகாரப் பகிர்வினூடாக வழிசமைத்து அழகிய இலங்கைத் தீவை பொருளாதார சுபீட்ச நாடாகக் கட்டியெழுப்பலாம்.

மேலே சொல்லப்பட்டவை எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகிலும் சிலவேளை இனச்சிக்கலை மென்மையாக்கக்கூடும்.

*கொக்குவில்.* **இராம ஜெயபாலன்.**

## லஞ்ச ஆணைக்குழு முன் வீரவன்ஸ ஆஜராகவில்லை

ஜே.வி.பி. கொழும்பு மாவட்ட எம்.பி விமல் வீரவன்ஸ, லஞ்சப் புகார் விசாரணை ஆணைக்குழு முன் நேற்றுமுன்தினம் ஆஜராகவில்லை.

ஆணைக்குழு முன் ஆஜராக அழைக்கப்பட்டிருந்த அவர், தனது அலுவல்கள் காரணமாக ஆஜராக முடியாதிருப்பதாகவும் வேறு ஒரு நாளைக் குறிப்பிடும்படியும் ஆணைக் குழுவிடம் கோரியிருந்தார். அவரது கோரிக்கையின் பேரில் நவம்பர் 5ஆம் திகதி ஆஜராகுமாறு ஆணைக் குழு அறிவித்திருக்கிறது. விமல் வீரவன்ஸவின் சொத்துக்கள் குறித்து விசாரணை நடத்தும்படி பிலியந்தலையைச் சேர்ந்த ஒருவர், ஆணைக் குழுவிடம் முறையிட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-4)

### சுழிபுரம், பொன்னாலை, மூளாயில்

# வயல்களில் நெற்பயிர்கள் கட்டாக்காலிகளால் அழிப்பு!

கட்டாக்காலிகளாகத் திரியும் கால நடைகளால் பெருமளவான நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம், பொன்னாலை, தொல்புரம் மற்றும் மூளாய் ஆகிய பகுதிகளில் உள்ள வயல் நிலங்களிலேயே கட்டாக்காலிகள் வந்து மேய்வதனால அப்பகுதியிலுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இடம்பெயர்வின்போது கட்டாக்காலிகளாகத் திரிந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் பகல் நேரங்களில் இராணுவப்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் நின்று மேய்வதாகவும் இதனால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மாலை வேளைகளில் அவை இப்பகுதியிலுள்ள வயல் நிலங்களில் வந்து மேய்கின்றன என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

கால போக நெற்செய்கையின் பொருட்டு விதைக்கப்பட்ட நெல், முளைத்து பயிராகி வருகின்ற இவ்வேளையில் கால்நடைகளால் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இராணுவத் தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்ட போதும் இது வரையும் எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-10)

# ஆலய வளவில் பௌத்த விகாரை; இந்து மதத்தை அவமதிக்கும் செயல்!

## கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் மகஜர்

அரியாலை,ஒக்.30

ஆலய வளவில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டிருப்பது இந்து மதத்தை அவமதிக்கும் செயலாகும்.

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய வளவில் அங்கு நிலை கொண்டுள்ள படையினர் விகாரை ஒன்றை அமைத்திருப்பது தொடர்பாக கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம், இந்து விவகார அமைச்சருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான - அர்ச்சகர் தங்கும் வீட்டு வளவினுள் - மன்றக் கட்டடம் அமைந்துள்ள காணியில் - அப்பகுதியில் நிலை கொண்டுள்ள பாதுகாப்புப் படையினரால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டிருக்கும் செயலானது எமது இந்து மதத்தினை அவமதிக்கும் செயலாகவே நாம் கருதுகிறோம். இந்த விகாரை அமைப்புத் தொடர்பாக எமது கண்டனத்தையும், அதிருப்தியையும் இந்து விவகார அமைச்சர் ஆகிய தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் ஆலய உற்சவ தினங்களில் சுவாமி வீதியுலா வருவதற்கு ஆலயச் சுற்றாடலில் போடப்பட்டுள்ள வீதித் தடைகளும் அகற்றப்படவேண்டும் என்பதனையும் தெரியப்படுத்த விரும்புகிறோம். எனவே, யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்து விவகார அமைச்சர் என்றவகையில், மேற்படி விகாரை அமைக்கும் செயற்பாட்டினை உடனடியாக நிறுத்தியும், ஆலயச் சுற்றாடலில் நிலைகொண்டுள்ள படையினரை வேறு இடம் நகர்த்தியும், மன்றச் செயற்பாடுகளை உடன் ஆரம்பிக்க வசதியாக மன்றக் கட்டடத்தில் நிலை கொண்டுள்ள படையினரை வேறு இடம் நகர்த்தியும் உதவுமாறு அன்போடும், பணிவோடும் வேண்டுகிறோம். இது உடனடியாக சாத்தியமாகாத பட்சத்தில் இந்து மதத்தவர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகலாம் என்பதனையும் தங்களின் கவனத்திற்கும் கொண்டு வருகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## மீனவர் பிரச்சினை குறித்து ஆராய செயலணிக் குழு

மன்னார்,ஒக்.30

வடக்கு - கிழக்கு பகுதிகளில் மீன்பிடித்துறையிலுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு 11பேர் கொண்ட செயலணிக்குழு ஒன்றை அமைக்கப் போவதாக மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டுபேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மீனவர்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்காக அமைக்கப்படவிருக்கும் இந்தச் செயலணிக் குழுவில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் வடக்கு - கிழக்கில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்தார். (ஓ-4)

## முகமாலைக்கு 'இன்ரசிற்றி'

தென்மராட்சி,ஒக்.30

யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை வரையிலான 'இன்ரசிற்றி' பஸ் சேவையினை தென்மராட்சி தனியார் மினி பஸ் சங்கத்தினர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளனர்.

ஒருவழிக் கட்டணமாக பயணிகளிடமிருந்து தலா 30 ரூபா அறவிடப்படுமெனவும் -

ஆசனங்களின் எண்ணிக்கையிலான பயணிகள் மட்டுமே ஏற்றப்படுவார்கள் என்றும் - தலைவர் மெ.அற்புதராசா தெரிவித்தார். (ஓ-117)

## திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவமாணி கற்கைநெறி

### விண்ணப்பங்களை அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் முகாமைத்துவமாணி கற்கைநெறிகளை தொடர்வதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திறந்த பல்கலைக்கழகங்களால் பிராந்திய நிலையங்களில் நடத்தப்பட்ட முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்த அனைவரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்ப முடிவு தினம் நவம்பர் மாதம் முதலாம் திகதியாகும்.

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்திற்கு குறைந்த எண்ணிக்கையான விண்ணப்பப்படிவங்களே கிடைக்கப்பெற்றுள்ளதால் தகுதியானவர்கள் உடனடியாக விண்ணப்பப்படிவங்களைப் பெற்று நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-5)




எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் 'மணல்வெளி அரங்கு' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் புதுக்குடியிருப்பில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன் அறிமுக உரையாற்றுவதை முதல் படத்திலும் விழாவில் மேடையேற்றப்பட்ட 'நாம் வாழ...' என்னும் நாடகத்தின் ஒரு காட்சியை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

NISSAN VANETTE VAN 50 டீசல் வாகனம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (9867)

மறுசீரமைக்கப்பட்ட தரமான நிலையிலுள்ள GL (புளோட்கியர்) செல் மொடல் கையஸ் 52-xxx வானும், 40-xxx ELF 250 றக்கும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777-271478, 0777-615234 (10009)

G.G. xxx தொடர் இலக்கமுடைய ஆட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவராசா, மாவடி பிள்ளையார் கோவிலடி, மீசாலை கிழக்கு, மீசாலை. (10008)

நல்ல நிலையிலுள்ள YAMAHA NEWS MATE YCLS, புதிய COLOUR TELEVISION (HITACHT) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு.வைகுந்தவாசன், இல.44, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (10010)

## பொய்யாமொழி ஜோதிடம்

விவாகத்தடை, தொழிற்றடை, கல்வித்தடை அகல ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும் (பலன தவறினால் பணம் திரும்பப் பெறலாம்). சனி, செவ்வாய் கிழமைகளில் 140, பருத்தித்துறை வீதி, நல்லூர் ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயிலடியிலும், ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலடியிலும் சந்திக்கலாம். (9873)

## கோழி மருந்துகள்

Raniket, Gampura மருந்துகள் ஞாயிறு காலையும், CRD சளி மருந்து புதன் காலையும் கொடுக்கப்படும். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(9950)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

சங்கானை - சித்தங்கேணி பிரதான வீதியில் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் வந்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: வேணு பட்டுச்சோலை, பிரதான வீதி, பண்டத்தரிப்பு. (10018)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10045)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மிகவும் மலிவுவிலையில் விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்தல் இலவசம். அத்துடன் கூடுதல் கொள்வனவிற்கு விலைக்கழிவும் வழங்கப்படும். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய்.(10035)

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. இலவசமாக சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (நரியன் குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (10034)

## கோழிக்குஞ்சு

ஒரு மாதம் நிரம்பிய சிவப்பு நிறப்பேட்டுக் குஞ்சுகள் (100 நாள்களில் முட்டையிடக்கூடியன) விற்பனைக்கு உண்டு. மற்றும் புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் விநியோகிக்கப்படும். தொடர்பு: (I) மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (II) பொன்னாலை வீதி, விதானைவளவு, மானிப்பாய். (10042)

## காணி விற்பனைக்கு

ஆறுகால்மடம் முன் ஒழுங்கையில் உள்ள வைரவர் கோயிலுக்கு அண்மையில் 2 பரப்புக் காணி சிறிய வீடு, கிணறு, மலசலகூட வசதியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லஷ்மி வெதுப்பகம், ஆறுகால்மடம். (10032)

## எங்கள் நாடு

வானொலியில் "கொழும்பில் ஒரு வீடு" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பரிசுபெற்ற நாடகங்களைக் கொண்ட நூல் "எங்கள் நாடு". விலை ரூபா 75/- . (10033)

## மணமகள் தேவை

1967 பிறந்த, சதய நட்சத்திரம், 2 ஆம் பாதம், ஜேர்மனியில் வதியும் மணமகனுக்கு படித்த, அழகான, ஜேர்மனியில் வதிவிட உரிமையுள்ள மணமகள் தேவை. மணமகளுக்கு 6-8 வயது வித்தியாசம் இருத்தல் வேண்டும். தொடர்பு:- இ.மாணிக்கம், "இரத்தினகிரி", பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு. (9983)

## மணமக்கள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1961இல் பிறந்த, மிருகசீரிடம், 8இல் செவ்வாய், வியாபாரஞ் செய்யும் மணமகனுக்கும், 1964இல் பிறந்த, ஆயிலியம், பயிற்றப்பட்ட ஆசிரியை மணமகளுக்கும், 1962இல் பிறந்த, புநர்பூசம், லக்கினத்தில் செவ்வாய் மணமகளுக்கும் மணமக்களை சகோதரி தேடுகின்றார். தொடர்பு: எஸ்.பத்மராணி, வி.எம்.றோட், எஸ்.பி. லேன், பருத்தித்துறை. (9926)

## தேவை

சகல வசதியுடன் கூடிய வீடு தேவை அல்லது கிணறு மலசலகூட வசதியுடன் கூடிய காணி தேவைப்படுகின்றது. வாடகை அடிப்படையில் வழங்கத் தயாராக உள்ளவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும். இணுவில், தாவடி, கொக்குவில், சுதுமலை ஆகிய இடங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: சி.இலங்கநாதன, கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, இணுவில். (10022)

## வகுப்புகள்

சுலபமாக ஆங்கிலத்தில் கதைகக்கப் பயில, இலக்கணம், கடிதம், வினாவிடை. வகுப்பில் பத்து (10) மாணவர்கள் மட்டும். தனித்தனி கவனம் செலுத்தப்படும். வாரம் நான்கு (4) வகுப்புகள். ந.விக்னேஷ்வரன் ஆச்சாரி, நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. (10014)

A/L 03, 04 வணிகப் பிரிவுகளுக்கான கணக்கீடு (Accounting) தனியாளுக்கோ, குழுவினருக்கோ வீட்டிற்கு வந்து விரிவான முறையில் கற்பிக்கப்படும். தொடர்பு: S.P. தயாளன், 10/14, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி. (10011)

# பிரமுக தனியார்வங்கி 'சீல்' வைக்கப்பட்டது!

கொழும்பு,ஒக்.30

கொள்ளுப்பிட்டியில் இயங்கி வந்த பிரமுக தனியார் வங்கி, மத்திய வங்கியால் மூடப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மத்திய வங்கி மேற்கொண்ட திடீர் நடவடிக்கை காரணமாகப் பெருந்தொகையான வாடிக்கையாளர்கள் வங்கியின் முன்னால் வந்து குழுமியிருந்தபோதும் வங்கியின் உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்த வங்கியின் வர்த்தக நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்துமாறு மத்திய வங்கியின் சட்ட ஆலோசனைப் பிரிவின் இயக்குநர் பத்மா சிறிசேன உத்தரவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை வங்கியில் கடமையாற்றிய ஊழியர்களைப் பொலீஸாரின் துணையோடு வெளியேற்றிய பின் வங்கியின் பிரதான கதவுகள் அனைத்தும் மூடி 'சீல்' வைக்கப்பட்டன.

இந்த வங்கியில் வாடிக்கையாளர்களால் 250 கோடி ரூபா வைப்பிலிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அறுபது நாள்களுக்கு மட்டுமே தற்காலிகமாக அதன் சேவைகளை இடைநிறுத்தி வைக்குமாறு மத்திய வங்கி உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும், மீண்டும் இயங்க அனுமதிக்கப்படுமா என்பது பற்றி மத்திய வங்கி பின்னர் அறிவிக்கும்.

பிந்திக் கிடைத்த தகவலின்படி பிரமுக வங்கியில் வைப்புச் செய்த வாடிக்கையாளர்கள் தமது பணத்தைப் பற்றி அஞ்சத் தேவையில்லை என பிரமுக வங்கியின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)


தென்மராட்சி சிற்றூர்திச் சேவையின்

யாழ். - முகமாலை - யாழ்.

இன்ரசிற்றி சேவை-ஆரம்பம்: 01.11.2002

யாழ்.தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து உங்கள் பிரயாணத்திற்கு வசதியாக ஒரு வழிக்கட்டணமாக ரூபா 30/- மட்டும். நின்று பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. சாவகச்சேரி, கொடிகாமம் நிற்பாட்டப்படமாட்டாது. (C/24545)


## நன்றி பகிர்தல்

20-10-2002 ஞாயிற்றுக்கிழமை அன்று இடம்பெற்ற எனது மகளின் திருமணத்திற்கு சர்வதேச இந்துமத குருபீடாதிபதி தர்மசாஸ்தா குருகுல அதிபர், எமது சங்கத்தினர், எமது அந்தணப் பெருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், ஆலய நிர்வாகத்தினர், வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் சகலதுறையைச் சார்ந்தவர்களும் வந்து ஆசிவழங்கி வாழ்த்துப்பா பாடி, பரிசில் கொடுத்து மகளின் திருமணத்தை இனிதே நடத்தினர். அவர்கள் அனைவருக்கும் என்றென்றும் நன்றி உடையவராகவுள்ளேன்.

நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்,
48, 2ஆம் பிறவுண் ஒழுங்கை,
வைரவர் கோயில், கந்தர்மடம்.

(10048)




## இவர்களுக்கு நன்றி

இதுவரை சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலக அபிவிருத்திக்கு என்னோடு இணைந்து அரும்பணியாற்றி ஆயிரக்கணக்கான தரமான நூல்களை அன்பளிப்பாகச் சேர்த்த அபிவிருத்திக்குழு உறுப்பினர்களுக்கும் இந்நூலகத்தின் செயற்பாட்டின் பக்கபலமாக செயற்பட்ட எனது உதவியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

2000ஆம் ஆண்டு இடப்பெயர்வு காலத்தில் இந்நூலகச் சொத்துக்களை வைத்து செயற்பட யாரும் இடம்தரா முன்வராதவேளையில் இந்நூலகம் முழுமையாகச் செயற்படக்கூடிய வகையில் பொருத்தமான இடம் தந்து உதவிய கோப்பாய் மகாவித்தியாலய வளாகத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னாள் நூலகர்
சரசாலை.
(C/24541)




## இளவாலை ஆஸ்பத்திரியில் கலவையாளர் இல்லை

சண்டிலிப்பாய்,ஒக்.30

இளவாலை அரசினர் வைத்திய சாலையில் மருந்துக் கலவையாளர் இல்லாமையால் வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் சிற்றூழியரே நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர மருந்துக் கலவையாளர் ஒருவரை நியமிக்குமாறு வைத்தியசாலை பொறுப்பதிகாரி யாழ்.சுகாதாரத் திணைக்களத்திடம் வேண்டுகோள்விடுத்துள்ளார். இந்த வைத்தியசாலையில் தினமும் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

## வெளிக்கள மீன்பிடிப் பயிற்சி

குருநகர்,ஒக்.30

யாழ்-பாங்ஷால் வீதியில் இயங்கி வரும் மீன்பிடி மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களுக்கு வெளிக்கள மீன்பிடிப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றது என இக்கல்லூரி அதிபர் எஸ். செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

தற்போது இப்பயிற்சி காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை சுழிபுரம், மாதகல், காக்கைதீவு, உயரப்புலம், சாவல்கட்டு, பண்டத்தரிப்பு, காரைநகர், ஊரி ஆகிய இடங்களில் இயங்கிவரும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-31)

## ஹாட்லி அதிபர் இடமாற்றம்


செம்பியன்பற்று,ஒக்.30

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் எம்.ஸ்ரீபதியின் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதிபர் எம்.ஸ்ரீபதியின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த இடமாற்ற உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது. அவர் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ஒ-36)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 03 - 07 - 1930 | 29 - 10 - 2001 |

### அமரர் V.சுந்தரலிங்கம் (சுந்தா)

*(இளைப்பாறிய ஒலிபரப்பாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை நாடாளுமன்றம், லண்டன் பி.பி.சி)*

ஆண்டு ஒன்று அகன்றிடினும்
ஆறிடுமோ உம் நினைவுகள்
மலர்ந்த முகத்துடன் உங்களிடமிருந்து விடைபெறுபவர்
சுந்தா சுந்தரலிங்கம் என்பதை நிரந்தரமாக்கி
விட்டீர்களே!

*(திதி 18.10.2002 இல் கோப்பாய் சாயி சிறுவர் இல்லத்தில் பஜனையும் பிரசாதம் வழங்கலும் இடம்பெற்றது.)*

*உங்கள் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கும்:*

மனைவி: திருமதி சு.பராசக்தி,
மகள்: திருமதி ச.சுபத்திரா,
மருமகன்: திரு.கு.சஞ்சயன்,
*பேரன்மார்கள்:*
செல்வன் ச.சேந்தன்,
செல்வன் ச.சேயோன்
(சிட்னி, ஆஸ்திரேலியா)

தகவல்:
ஐ.கணேசலிங்கம்
*(இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர் - மைத்துனர்),*
*அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை.*

(10041)

## மரண அறிவித்தல்கள்

### கோவிந்தபிள்ளை சண்முகநாதன்

தெல்லிப்பளை, கலட்டிக் கிணற்றடியைச் சேர்ந்த கோவிந்தபிள்ளை சண்முகநாதன் கடந்த (27-10-2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும் லட்சுமிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, நடராசா (நாவலர் புத்தகசாலை), தங்கம்மா, கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா), தியாகராசா, அமிர்தலிங்கம் (ஆஸ்திரேலியா), பஞ்சலிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-10-2002) புதன்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டிக் கிணற்றடி,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*
(10031)

தகவல்:
சோ.நடராசா (சகோதரர்)
(நாவலர் புத்தகசாலை, மந்திகை)

### திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை

கேணியடி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை நேற்று (29-10-2002) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசசிங்கம் - பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் இராமகிருஷ்ணன், காலஞ்சென்ற சுபத்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், உமாதேவி, தியாகராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்திகா, தினேஷ் (சென்.ஜோன்ஸ் கல்லூரி, A/L வர்த்தகப்பிரிவு மாணவன்), தர்சிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஆண்டு 11 மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேந்திரன் (ஆஸ்திரேலியா), ஜெயராம் (லண்டன்) ஆகியோரின் பெரியதாயாரும் விசாகன் (லண்டன்), காங்கேயன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29-10-2002) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணியடி,*
*திருநெல்வேலி.* (10039)

தகவல்:
சுப்பிரமணியம் இராமகிருஷ்ணன்
மகன்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் 14ஆம் திகதி நாளை (31.10.2002) வியாழக்கிழமை பகல் 9.23 மணி முதல் 11.20 மணி வரையுமுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| கொக்குவில் மேற்கு சொர்ணவடலியைச் சேர்ந்த திரு.திருமதி பாலரட்ணம் தம்பதியரின் புதல்வன் | பெரிய போறதிவு முனைத்தீவைச் சேர்ந்த திரு.திருமதி சிவசம்பு தம்பதியரின் புதல்வி |
| செல்வன் அருமைரட்ணம் (சிறி) அவர்களுக்கும் | செல்வி சந்திரகலா (கலா) அவர்களுக்கும் |


இறைவன் துணைகொண்டு வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

ந.கோவிந்தராசா (குடும்பம்)
இல.64, காரைக்காட்டுலேன்,
வண்/யாழ்நகர்.
T.P.: 021-222 3432

வ.நவரத்தினம் (குடும்பம்)
நீராவியடி,
யாழ்நகர்.

(10024)



# இரண்டாம் ஆண்டின் நினைவில்.....



அமரர்
## மருதர் முருகேசு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02-08-1922 | 21-10-2000 |

திதி: 30-10-2002

அன்பும் அறமும் அறிவின் திறனும்
என்றும் எமக்கு அளித்த கோவே
இன்று இரண்டு ஆண்டுகள் போயினும்
என்றும் உங்கள் நினைவுகள் நிலைக்கும்!

"குமரகிரி",
நவாலி வடக்கு,
மானிப்பாய். (10057)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயப் புனருத்தாரண திருப்பணிகளில் ஆரம்பகாலந்தொட்டு தனது கணவர் திரு.நா.சின்னராசா ஆசிரியர் அவர்களுடன் இணைந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்த

## பண்டிதை அன்னலட்சுமி சின்னராசா

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமியைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில்
பரிபாலன சபையினர்

(10060)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் நவரத்தினம் விஜயகாந்தன்

| தோற்றம் | (கனடா) | மறைவு |
|---|---|---|
| 06-11-1954 | | 28-10-2002 |

*கனடாவில் திடீரென மறைந்த,*
*எம்நெஞ்சை விட்டு என்றும் நீங்கா*
*எமது உறவுக்கு கண்ணீர்ப் பூக்களைத்*
*காணிக்கை ஆக்குகின்றோம்.*
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (சி-24550) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## நவரத்தினம் விஜயகாந்தன்

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் விஜயகாந்தன் 28.10.2002 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - சிவஞானவதி தம்பதியினரின் அன்பு மகனும் கனடாவில் வசிப்பவர்களான சாந்தமலரின் அன்புக் கணவரும் துசி, மயூரன், திசான், திசானி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கபிதாசின் மாமனாரும் விதுசனின் அன்புப் பேரனும் சண்முகம் - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும் காந்தமலர், சந்திரமலர், சந்திரகாந்தன், சிறீஸ்காந்தன், கருணாகாந்தன் (இத்தாலி), பவளமலர் (வதிரி), ரஞ்சிதமலர் (ஆசிரியை - நாமகள் வித்தியாலயம், திருமலை), சிறிமுருககாந்தன் (அச்சுவேலி மத்திய கல்லூரி - ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனடாவில் வசிப்பவர்களான சிவகுமாரி, சிறீஸ்கந்தராசா, சந்திராதேவி, ஜெகேஸ்வரி, வைசுந்தவாசன் (யாழ்ப்பாணம்), சிவராஜா (வதிரி), சிவேந்திரராஜா (திருமலை விபுலானந்தாக் கல்லூரி ஆசிரியர்), சிவசுஸ்வரி (அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனடாவில் வசிப்பவர்களான சிவகாந்தனின் சிறிய தந்தையாரும் திசாந்தினி, அபிராமி, அபிராமனினதும், வதிரியில் வசிப்பவர்களான ஜெயந்தி, அருண்யா, லக்சனாவினதும், திருமலையில் வசிப்பவர்களான சரண்யா, கிசோ, செந்தில்ராஜ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கனடாவில் வசிப்பவர்களான மாதுரி, சயந்தன், துசிந்தா, சாதனா, கர்சனா, கீர்த்தனாவினதும், நீர்வேலியில் வசிப்பவர்களான கபிர்தனை, யதுர்சனன் ஆகியோரினதும் பாசமிகு பெரியதந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.11.2002 சனிக்கிழமை அன்று கனடாவில் நடைபெறும். அன்னாரின் மரண அஞ்சலி அச்சுவேலி தெற்கில் இன்று (30.10.2002) புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (சி-24551)

ந.முருகதாசன் (சகோதரன்)
*நீர்வேலி வடக்கு.*


# யாழ் மகளிர்களின் மனதை வென்றவள்




(புதிய)
## போரோசொப்ட்

இதன் விசேஷ கலவை கண்ணின் கீழ் உள்ள கருவளையங்களை அகற்றுவதோடு, முகத்தில் உள்ள கரும்புள்ளிகளையும் இல்லாமல் செய்கிறது.

இதில் கற்றாளைச்சாறு சிறந்த முறையில் சேர்க்கப்பட்டமையால் பருக்களை அகற்றுவதுடன் பருக்களினால் ஏற்பட்ட காயங்கள், கரும்புள்ளிகளையும் அகற்றுகிறது.

தீக்காயங்கள் மற்றும் அதனால் உண்டாகும் தழும்புகளை குணப்படுத்தி சருமத்தை மிருதுவாக்குகிறது.

ஆணாகவோ சரி பெண்ணாகவோ இருப்பினும் சரி சவரம் செய்த பின்பு போரோசொப்டை பாவிப்பதன் மூலம் சருமம் மென்மையாகும்.

சிறந்த பலனைப் பெற புதிய போரோசொப்ட் கிறீமை இரவு படுக்கைக்கு முன் பாவிக்கவும்

ஏக விநியோகஸ்தர்:-
**JEGHAN PHARMACY**
No.462/B, Hospital Road, Jaffna. Tel.021-2194, 3191




சாமியே சரணம் ஐயப்பா!

# நிலக்ஷனை மகிழ்வுடன் பாராட்டுகின்றேன்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்

## செல்வன் சிவகுமார் நிலக்ஷன்

5ஆந்தரப் புலமைப்பரிசில் பரீட்சை 2002இல் 146 புள்ளிகளைப் பெற்று தேர்ச்சியடைந்தமையிட்டு பாராட்டுவதில் மகிழ்ச்சியடைவதோடு, அவர் கல்வி கற்பதற்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களுக்கும் மனம் நிறைந்த நன்றியைக் கூறி மேலும் அவரது கல்வி சிறப்புற காரையம்பதி ஆண்டிகேணி ஐயனை வேண்டுகின்றேன்.

கனகசபை சுந்தரலிங்கம்
*(காரை மணிகண்டன்)*

(10038)

## வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்
# சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான
# கேள்வி அறிவித்தல் - 2003

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2002.11.12 பி.ப.14.00மணிவரை
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2002.11.13.நண்பகல் 12.00மணிவரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2002.11.13 பிற்பகல் 15.00 மணி
04. ஏனைய விவரங்கள் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரபணம் (மீளளிக்கப் படாதவை) |
|---|---|---|---|---|
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 1. சத்தியக் காட்டுச் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | | 225,000.00 | 5,000.00 | 250.00 |
| 2. பல்லசுட்டிச் சந்தை (தற்காலிக சந்தை - கேள்விகாரர் ஒழுங்கு செய்தல்) | | 5,000.00 | 500.00 | 250.00 |
| 3. தொல்புரம் மத்திய சந்தை | | 35,000.00 | 1,000.00 | 250.00 |
| 4. பொன்னாலைச் சந்தை (மூளாய்) | | 75,000..00 | 1,000.00 | 250.00 |
| சங்கானை உப அலுவலகம் | | | | |
| 1. மரக்கறிச் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | | 795,000.00 | 5,000.00 | 250.00 |
| 2. மீன்சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | | 185,300.00 | 5,000.00 | 250.00 |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 1. வட்டுக்கோட்டை பொதுச் சந்தை (இராக்கலடி) | | 7,100.00 | 500.00 | 250.00 |
| 2. சங்கரத்தை தற்காலிக சந்தை | | 70,000.00 | 2,000.00 | 250.00 |
| அராலி உப அலுவலகம் | | | | |
| 1. தற்காலிக சந்தை (கேள்விகாரர் ஒழுங்கு செய்தல்) | | 1,200.00 | 200.00 | 250.00 |
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 50/- | 7,000.00 | 500.00 | 250.00 |
| சங்கானை உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 100/- | 154,000.00 | 3,000.00 | 250.00 |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 12,600.00 | 500.00 | 250.00 |
| 3. கருவாட்டுக் கடை | 75/- | 6,000.00 | 500.00 | 250.00 |
| வட்டுக்கோட்டை உபஅலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 75/- | 10,000.00 | 500.00 | 250.00 |

குறிப்பு:- 01. குறிப்பாக சங்கானை, சுழிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மரக்கறிச் சந்தைகளுக்குள் உரிமத்தோடு தொடர்புடைய அழகு சாதனப் பொருள்கள், புடவை வகைகள், பிளாஸ்டிக் பொருள்கள் விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

02. தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை, கேள்விப் பத்திரப்பணம், மாதவாடகை ஆகியவற்றிற்கு வற்வரி 20% சேர்த்து அறிவிடப்படும் என்பதைத் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

*வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,*
*தலைமையலுவலகம், சுழிபுரம். 2002.10.29* (சி-24552)

திரு.வே.மகேந்திரன்
தலைவர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்.

## மீளக்குடியமர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றார் குடில்களிலும் வாழும் அடிமை வாழ்வை நிரந்தரமாகக் கொள்வதா?

சொந்த மண்ணில் வாழமுடியாது - தொழில் செய்யமுடியாது - எமது கடலில் மீன்பிடிக்க முடியாது - எங்கள் குல தெய்வங்களை வழிபட முடியாது - கல்வி வசதிகளை அடியோடு தொலைத்துவிட்டு எமது சந்ததியும் வாழமுடியாத நிலை உடனே மாற வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேரணியில் வலி.வடக்கைச் சேர்ந்த பல்வேறு பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களும் கலந்துகொள்வர்.

வலி.வடக்குக்கு வெளியே ஏனைய இடங்களில உள்ள பொது அமைப்பு பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஒ-86-173)


**இயற்கை மூலிகை மருத்துவ முகாம்**

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சையின்மூலம்
*ஆஸ்துமா, உடல்பருமன், சலரோகம், முகப்பரு, மூலம், இளநரை, தலைமுடி கொட்டுதல், தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும்*
எவ்வித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக, குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக் குறைவு, குழந்தை பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
**Dr.R.K.நவனீதன்** DYNS:SMP:NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
இல.54, மணிக்கூட்டு வீதி,
யாழ்.உல்லாச பயணியர் விடுதி
(வெலிங்டன் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

*மருத்துவ முகாம் நடைபெறும் நாள்கள்:*
ஒக்ரோபர் 30, 31 மற்றும்
நவம்பர் 1,2,3,4ஆம் திகதிகளில்.
(10050)



எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு
யாழ்.மண்ணின் பிரபல பாடகர்களும்
பல்கலைக்கழக மாணவர்களும்
'ஆனந்' இசைக்குழுவினரும் இணைந்து
தீபாவளி அன்று பி.ப.1.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்
மாலை 6.00 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் மின்னொளியிலும்
09.11.2002 சனிக்கிழமை அன்று பி.ப.2.00 மணிக்கு நெல்லியடி ராஜலஷ்மி திரையரங்கிலும் மாபெரும்

**'பொன்மாலைப் பொழுது'**

இசை நிகழ்வினை
வழங்கவிருப்பதால் அனைத்து ரசிகர்களையும்
இந்த இசை மழையில் நனைந்திட வருக வருகவென அழைக்கின்றோம்.

*யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர்.*
(10069)



**இலவசக் கருத்தரங்கு ! ! !**

**STUDY IN USA, UK, AUSTRALIA, CANADA, GERMANY SWITZERLAND, CYPRUS, BULGERIA, SINGAPORE ....**

VISU Consultants Ltd Hyderabad, India
now in Sri Lanka in collaboration with
**Global Academy (Pvt) Ltd.**

Personal Consultations with
*Dr. K. Rama Devi - Vice Chairman, Visu Consultants*
*Ms. Pushpa Rama - Representative of Canadian Universities*

**Spot Admissions for 2003**

*CANADA*
City college, George Brown - York University
Seneca College, Niagra - University of Toronto
Conestoga College - University of Waterloo
St. Clair College - University of Windsor
Niagra College

*USA*
OKLAHOMA CITY UNIVERSITY- USA
For Personal Consultations Meet our University Representative on 29th, 30th & 31st Oct

Job oriented Diplomas, Graduate & Postgraduate programs in varied programs.
Interested candidates should bring their original academic documents & test scores along with photocopies of all their testimonials.

Date : 29th & 30th of October   Time : 5 PM onwards.( both days)
Venue : Sindhi Community Centre 32, 11th Lane, Colombo 03.
(Adjoining Lane of McDonalds)

Global Academy (Pvt) Ltd
Crow Island, Colombo 15. Tel/Fax : 520560
Email : global@webstation.lk Www.globalapl.com

Visu Consultants Ltd.
Hyderabad, India.

இலவசக் கருத்தரங்கு முன் பதிவுகளுக்கு .
Ms. Fazmina on 332177 or Mr. Yadhavan on 0777-538254



**தினமும் விமான சேவைகள்**

விமானப் பயணிகளின் நன்மைகருதி வாரத்தில் 7 நாள்களும் காலை, மாலை விமானசேவைகளான




ஆகிய மூன்று விமான சேவைகளின் பயணச்சீட்டுக்களையும் இன்று (30.10.02) தொடக்கம் ஸ்ரான்லி வீதி, இல.212, மகாலட்சுமி கட்டடத்தில் அமைந்துள்ள தனித்தனி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
(C-24550)
T.P.NO:- 021-222 3564, 021-222 2024, 0777-357109 S.V.பரமேஸ்வரன் & Co...


## புகைப்படக் காட்சி

ஊர்காவற்றுறை,ஒக்.30

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை உள்ளடக்கிய 'காலத்தின் பதிவுகள்' புகைப்படக் கண்காட்சி இன்று முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில நடைபெறவுள்ளது.

இந்த கண்காட்சி நிகழ்வினை ஊர்காவற்றுறை அரசியல் பொறுப்பாளர் ரதன் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

## மீனவர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்சமயம் நடைமுறையிலுள்ள 'பாஸ்' நடைமுறையை நீக்கி சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் -

கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கைக்கு பதிலளித்து உரையாற்றிய கடற்படை அதிகாரி தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் யுத்தநிறுத்தம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. நிரந்தர சமாதானம் இன்னும் வரவில்லை. இந்த நிலையில் நாம் எமது கட்டுப்பாடுகளை தளர்த்த முடியாது. எனினும் மனிதாபிமான அடிப்படையில் மீனவர்களுக்கு பலவித உதவிகளை வழங்கி வருகின்றோம். ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதித்துள்ளோம்.

எமது பிரதான முகாம்களிலிருந்து 2 மைல் சுற்றாடல் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மீன் பிடிக்க அனுமதித்துள்ளோம். பகலில் மீன் பிடிக்கச் செல்பவர்கள் இரவில் கரைக்குத் திரும்ப வேண்டும் என்ற தற்சமயம் அமுலில் உள்ள நடைமுறையை மாற்றுவதில் பல சிக்கல்கள் உள்ளன.

முகாம்களைச் சுற்றி பாதுகாப்புக்காக கடலில் கண்ணிகள் விதைக்கப்பட்டுள்ளன. திரும்பி வருபவர்களை இரவில் - இருட்டில் - இனங்காண்பதற்கு சமிக்ஞை விளக்குகள் அமைக்கப்பட வேண்டும். இவற்றைச் செய்வது உடனடியாகச் சாத்தியம் இல்லை.

இதன் காரணமாக மீனவர்கள் இரவில் கரைக்குத் திரும்ப அனுமதிக்க முடியாதுள்ளது. அவசரத் தேவை கருதி கரை திரும்பும் மீனவர்களுக்கு உதவி செய்யமுடியும்.

மீனவர்களுக்கு 'பாஸ்' வழங்கும் நடைமுறையை நீக்குவதற்கு தயாராக இருக்கின்றோம். மீனவர் சங்கங்கள் மீனவர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்கினால் அந்த அடையாள அட்டையை வைத்து மீனவரை இனங்காண முடியும். எனவே மீனவர் சங்கங்கள் முதலில் சகல மீனவர்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்கத்தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார் அவர்.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தம்முடன் நேரடியாக தொடர்பு கொண்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ-3-8)


**ராஜா** யாழ்ப்பாணம்.
*விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த*
**யூத்**
(ரீல்ஸ்)
காட்சிகள் : 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)
அனைவரின் வேண்டுகோளுக்கு இணங்க யூத் நீடிக்கப்பட்டுள்ளது.
(C-24275)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி, நம்பியார், நாகேஸ் நடித்த
**கலங்கரை விளக்கம்**
(கலர் ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.45, 6.00
(C-24276)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்
சூர்யா, ஸ்ருதிகா, விஜயகுமார் நடித்த
**ஸ்ரீ**
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
(10053)


## கணனி பயிற்சி நிலைய இயக்குநர்களின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து கணனி பயிற்சிநிலைய இயக்குநர்களுக்குமான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11மணிக்கு சர்வதேச மாணவர் பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கணனிப் பயிற்சிநிலைய இயக்குநர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்**
**ஊர்காவற்றுறை**

சகல வாக்காளர்கட்கும்!
20.10.2002 ஆம் திகதி நிறைவெண் இல்லாது ஒத்தி வைக்கப்பட்ட பின்வரும் நான்கு கிளைகளுக்குமான கிளைக்குழுத் தேர்தல் நாளை (31.10.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறும்.

| கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 03 | செபஸ்தியார் கோவிலடி | சங்கத் தலைமைக் காரியாலயம் |
| 04 | கரம்பொன் கிழக்கு பாலக்காடு | சங்கத் தலைமைக் காரியாலயம் |
| 11 | சுருவில் | மகாமாரி சனசமூக நிலையம், புளியங்கூடல். |
| 12 | சரவணை | நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம், சிவசுப்பிரமணிய சுவாமி கோவில். |

கிளைகளின் சகல வாக்காளர்களும் இத்தேர்தலில் கலந்துகொள்ளவும்.

தி.சுந்தரலிங்கம்
*தலைவர்.*

ரி.எம்.டொறின்
*செயலாளர்*

(C/24577)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்**

மலர்வு
10 - 01 - 1962



உதிர்வு
30 - 09 - 2002

**செல்வி வே.சிவகாமிப்பிள்ளை**
(ஆசிரியை - கமலாசனி வித்தியாலயம், விடத்தல்பளை)

மாதமொன்று ஆனதம்மா மறக்கவில்லை உன் வதனம்
திங்களொன்று சென்றதம்மா தீரவில்லை எம் துயரம்
மாநிலத்தில் நீர் வாழ்ந்த நாள்களுக்காய் ஏங்குகின்றோம்.

இன்று (30.10.2002) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*விடத்தல்பளை மத்தி.*
*மிருசுவில்.*
- குடும்பத்தினர்.
(10071)

## மரண அறிவித்தல்கள்

### ஐயா சின்னையா

கரணவாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயா சின்னையா நேற்று (29.10.2002)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் இ.மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் ப.திபாகேஸ்வரி (திருகோணமலை), சி.தியாகேஸ்வரன் (கரணவாய்), சி.மகாலிங்கம் (நில அளவையாளர், திருகோணமலை), சி.மகேந்திரன் (அதிபர், யாழ்.நாகர்கோவில் ம.ம.வி.), கு.கிருஸ்ணலீலா (கனடா), சி.சிவஞானம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அமரர் பரமலிங்கம், வள்ளிப்பிள்ளை, கமலாதேவி, குமாரவேலாயுதம் (அமெரிக்கா), இராஜேஸ்வரி (கனடா), பராசக்தி, நடராசா, சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மாமனாரும் விஷ்ணுவேணி (சுவிஸ்), சிவசக்தி (மொறட்டுவ பல்கலைக் கழகம்), இராதாகிருஷ்ணன் (லண்டன்), பவானந்தன் (சுவிஸ்), செல்வலக்சுமி (சுவிஸ்), உதயசூரியன் (சுவிஸ்), குகானந்தன் (லண்டன்), சிவகெங்காதேவி, ராதிகா, உதயசங்கர், உமாபதிசிவன், மகாதீபன் (யாழ்.பல்கலைக்கழகம்), தயாபரன், பிரதீபன் (பொறியியற்பீடம், பேராதனை), திலீபன், மயூரன், பார்த்தீபன், இன்பராஜ் (பொறியியற்பீடம், பேராதனை), வாசுதேவன், நிரோஜா, மைதிலி, ரமேஸ், சுதா, ஜெகா, வினோத் (கனடா), கஜலக்சி, நிலானி, அபிலாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2002) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் கிராய் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.மகேந்திரன்
(C/24579)

### திருமதி பயஸ் றெபேக்கா

குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பயஸ் றெபேக்கா நேற்று (29.10.2002) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாஸ் பயஸ் அவர்களின் அன்பு மனைவியும் யேசுதாசன், ஜெயரெட்ணம், அருட்தந்தை இருதயதாஸ் (பருத்தித்துறை பங்கு), அன்னமரியை, டேவிற், மல்லிகா (ஜேர்மனி), அருட்சகோதரி ஜெயா (திருச்சிலுவை கன்னியர்மடம்), விஜி (லண்டன்), சாந்தி, யேம்ஸ் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

நாளை (31.10.2002) வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதைத் தொடர்ந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*13/? தண்ணீர் தாங்கி,*
*5ஆம் குறுக்குத்தெரு,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
பிள்ளைகள்
(10073)

# 8 மு.கா. எம்.பிக்களின் நடத்தை சமாதான முயற்சிக்கு இடையூறு!

## காணியமைச்சர் சேனாரத்ன கூறுகிறார்

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் விடுத்திருக்கும் கோரிக்கை இச்சந்தர்ப்பத்தில் விடவேண்டிய ஒன்றல்ல. விடுதலைப்புலிகள் இயக்கம் மாபெரும் தியாகத்தை, போராட்டத்தை வருடக் கணக்காகச் செய்தே பேச்சு மேசையில் அவர்களின் யோசனையை முன்வைத்திருக்கின்றனர். மு.கா. எம்.பிக்களின் நடத்தை சமாதான நடவடிக்கைகளுக்கு ஒரு பெரும் இடையூறாகும்.

காணியமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றைய சிங்களத் தினசரி ஒன்றுக்கு வழங்கியிருக்கும் செவ்வியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் பகிஷ்கரிப்பை கைவிட முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் அநீதியானவை என்றா கூறுகிறீர்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்திருக்கிறார். பதிலில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இடைக்கால நிர்வாக அமைப்பின்படி முஸ்லிம் மக்களுக்கு உரிய கௌரவமான உரிமையை அச்சந்தர்ப்பத்தில் பேச்சு மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு, கிழக்கில் அமைதியின்மையை ஏற்படுத்தி அக்கோரிக்கையை பெற்றுக்கொள்ளும் அவசியம் இல்லை.

முஸ்லிம் மக்களுக்கு எந்த ஒரு அநீதியும் ஏற்படுத்தப்படமாட்டாது என்று பிரதமர் பகிரங்கமாக அறிவித்திருக்கையில் அந்த 8 எம்பிக்களும் இவ்வாறான ஒரு தீர்மானத்தை ஏன் மேற்கொண்டார்கள் என்பதை நான் எண்ணிப்பார்க்க முடியவில்லை. ஆயினும் அதைச் செய்வது கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் கோரிக்கைக்காக அல்ல என்பது மிகத் தெளிவானதாகும் - இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.

### நகரில் தீபாவளி கலகலப்பு!

யாழ்நகரில் தீபாவளியை ஒட்டிய வியாபார நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

நவீன சந்தையில் புடைவை வியாபாரம் சூடுபிடித்திருக்கிறது. நடைபாதை வியாபாரமும் களைகட்டியுள்ளது. வழமையைவிட பெரும் எண்ணிக்கையான மக்கள் நகருக்கு வந்து செல்வதால் சனநெரிசலும் காணப்படுகிறது.

தீபாவளியை ஒட்டி கடந்த ஞாயிறு தினத்தன்றும் கடைகள் திறக்கப்பட்டிருந்தன. எதிர்வரும் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும் முழு நாளும் வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. (ஐ-17)


ஆரம்பமாகின்றன......
HARD WARE CLASSES
தொடர் செய்முறைப் பயிற்சிகள்...
Sat., Sun. 9 a.m. - 12 p.m.
Mon., Wen. 4 p.m. - 7 p.m.
D Solve in IBMS
நிலவு.Com
701, K.K.S. Road, Jaffna.
(C24549)



உங்களாலும் முடியும்! Web உலகில்!!
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன:
HTML, Front Page
Sat., Sun. 9 a.m. - 11 a.m.
5 p.m. - 7 p.m.
Tue., Thu. 5 p.m. - 7 p.m.
D Solve in IBMS
நிலவு.Com
701, K.K.S. Road, Jaffna.
(C24548)


### சரணடைந்த சிப்பாய் பலாலியில்!

யாழ்ப்பாணம்,ஒக்.30

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த படைச்சிப்பாய் பலாலி இராணுவத் தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஆர்.பி. சந்திரசேகரா தெரிவித்தார்.

சரணடைந்த தன்னை படையினரிடம் கையளிக்க வேண்டாம் என்று பிரஸ்தாப சிப்பாய் மன்றாடிக் கேட்டதையடுத்து அவரைப் பொறுப்பேற்க கண்காணிப்புக்குழு மறுத்திருந்தது தெரிந்ததே.

இதற்கிடையில் -

சக சிப்பாய்கள் தன்னை சித்திரவதை புரிந்தனர் என்று சரணடைந்த சிப்பாய் தெரிவித்திருந்ததை அடுத்து அதுபற்றி விசாரிக்க படை உயரதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

### கட்டுநாயக்கா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்களான அலெக்ஸ், நெடில், தொல்காப்பியன் ஆகியோருக்கான கடவுச்சீட்டுக்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டிருந்தன.

இதைத் தொடர்ந்து அரச பிரதிநிதிகளான அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் மற்றும் உதவியாளர்கள் எட்டுப் பேரும் விமான நிலையத்துக்கு வந்தனர். இவர்களுடன் உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களும் செல்கின்றனர்.

அரசு - புலிகள் பிரதிநிதிகளை அரச உயர்மட்டத் தலைவர்கள் வழியனுப்பி வைத்தனர்.

நேற்றுக் காலை அரசு தரப்புக் குழுவில் இடம்பெறும் சமாதான செயலணிப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக, ஆலோசகர்களான மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, ஜோன் குணரத்தின, சானக ஜயசேகர மற்றும் உதவியாளர் ஒருவர் ஆகியோர் தாய்லாந்து பயணமானார்கள்.

அரச தரப்புக் குழுவில் மொத்தம் 16 பேர் இடம்பெறுகின்றனர். அரசு - புலிகள் பிரதிநிதிகள் தாய்லாந்துக்கு பயணமாவதை ஒட்டி கட்டுநாயக்காவிமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

# பாதுகாப்புச் சட்ட சீர்திருத்தங்கள்: ஜனாதிபதி-அரசு மற்றொரு மோதல்!

கொழும்பு,ஒக்.30

அரசாங்கம் கொண்டுவந்துள்ள 'பாதுகாப்புச் சட்ட சீர்திருத்தங்களின்' பின்னால் உள்ள அரசாங்கத்தின் நோக்கங்கள் குறித்து சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன என்று ஜனாதிபதி செயலக பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கூறுகிறார்.

நேற்றுக் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைக் கூறிய அவர், பதவியேற்று ஒரு வருடத்தின் பின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் 19 ஆவது அரசமைப்புச் சட்டதிருத்தத்துக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து பாதுகாப்புச் சட்ட சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருப்பது, அரசாங்கத்தின் நோக்கங்கள் குறித்து கேள்விகளை எழுப்பியிருக்கிறது என்றும் கூறினார்.

அரசு தயாரித்திருக்கும் பாதுகாப்புச்சட்ட சீர்திருத்தங்கள் நகல் சட்டம், ஜனாதிபதியின் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் குறைத்து, அவற்றைப் பாதுகாப்பு அமைச்சரிடம் வழங்க வழி செய்கிறது. இச்சட்டம் தொடர்பான விவரங்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நடந்த சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்டன. ஜனாதிபதியின் ஆலோசனையும் கோரப்பட்டது.

தனது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் இரு வாரங்களில் தெரிவிப்பதாக ஜனாதிபதி அச்சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி செயலக பேச்சாளர் பீரிஸ் மேலும் கூறுகையில், பாதுகாப்புச் சட்ட சீர்திருத்தங்கள் பற்றிய ஏதோ ஒரு நகல் சட்டம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. அது இன்னமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவோ அல்லது அங்கீகரிக்கப்படவோ இல்லை. அமைச்சரவையினால் அது அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அதன் சட்டபூர்வ தன்மை உன்னிப்பாக ஆராயப்பட வேண்டும் - என்றார். (ஐ)

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் பா.நடேசன், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, பாப்பா, தமிழினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

காவல்துறையினரும், போராளிகளும் வழி நெடுகிலும் பூரண பாதுகாப்பு வழங்கினர். (ஐ-3-164)

### அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில் இதனைத் தெரிவித்தார்.

அரசுக்கும் - புலிகள் இயக்கத்துக்கும் இடையே இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாகவிருக்கின்றன. ஆயினும் அது குறித்து ஜனாதிபதிக்கு இன்னமும் விளக்கிக் கூறப்படவில்லை. இதனாலேயே ஜனாதிபதி மீண்டும், மீண்டும் இதனைக் கூறவேண்டியிருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசு - புலிகள் பேச்சில் ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரையும் இடம்பெறச் செய்ய ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருக்கிறார். இக் கோரிக்கைக்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை; சாதகமான பதில் கிடைக்கும் என்று ஜனாதிபதி நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்து போதுமான தகவல்கள் கிடைக்காததாலேயே தமது பிரதிநிதி ஒருவரையும் நியமிக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுக்கிறார் என்றும் ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் கூறினார். (ஐ)


"Walk In" interview
A "Walk In" interview will be held at the IIS. 100, Clock Tower Road, Jaffna, for the Post of Lecturer and Visiting Lecturer on 02.11.2002 from 10.00 A.M. to 11.00 A.M.
Candidates holding a degree in computing from recognized Universities or an equivalent professional qualification are entertained.
Please note that attractive salaries will be offered for suitable candidates.
Director.
Institute of Informatics Studies.
100, Clock Tower Road, Jaffna.



சிங்கள வகுப்பு
பேச, எழுத, வாசிக்க
By: A.S.மல்வான
வியாழன், வெள்ளி
4.00 - 6.00 மணி
ஆரம்பம்: 31.10.2003 4.00 p.m.
ஸ்ரீ கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.



இணைந்த கணிதம்
வகையீடு A/L 2004
திகதி : 30-10-02
ஆரம்பம் Wed 6-7
By : M.Rajan
No.431,Temple Road,
Nallur.



பிரத்தியேக கணனி வகுப்புக்கள்
பல்கலைக்கழக மாணவர்கள், உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கென
MS EXCEL
MS WORD
பிரத்தியேக வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.
ஆரம்பம் : 09.11.2002
காலை 10.00 மணி
மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.



நலமான வாழ்வுக்கு என்றும் நலந்தருவது
புரோசிங் (PROZINC)
★ இழந்த சக்தியை மீட்டெடுத்தல்.
★ இரத்த உற்பத்தியை அதிகரித்தல்.
★ வளரும் பிள்ளைகளுக்கு பசி உணர்வை' தூண்டுதல்.
★ போன்றவற்றில் முக்கிய பங்குவகிப்பதுடன்
புரோசிங் - அனைத்து விற்றமின்களுடன் அதியுயர் தாவரப் புரதச்சத்து நிறைந்துள்ளதால் சைவப் பிரியர்களுக்கும் உகந்தது..
புரோசிங் - கர்ப்பிணித் தாய்மார், விளையாட்டு வீரர், வளரும் பிள்ளைகள், முதியோர் என முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற சிறந்த பானம்.
புரோசிங் - தற்போது யாழ்.நகரின் அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும்.


தொடர்புகளுக்கு :
JEGAN PHARMACY - யாழ். நகர். Tel: 222 3191
ARKEM - கொழும்பு. Tel: 470290, 071-341956
(C-24525)



CHEMISTRY CENTRE
பலாலி வீதி, கந்தர்மடம்
வகையீடு A/L 2004
Wed. 6 - 7 p.m.
Limits Thurs. 6 - 7 p.m.
By:- பிரதீபன்
காந்தப்புலம்
Wed., Thurs. 3 - 4 p.m.
ஆரம்பம் :- 30.10.2002
By:- சிவலிங்கம்
CHEMISTRY Paper
Wed. 6 - 8 p.m.
General 6 - 7
Inorganic 7 - 8
By:- அன்பழகன்


## ஓராண்டு நினைவஞ்சலி





### அமரர் பண்டிதர் தம்பிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

திதி: ஐப்பசித் திங்கள் முதலாம் நாள் திரயோதசி

'தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும் சார் வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கியாதும் ஐயுறவில்லையே'

மனைவி: ஸ்ரீவரதநாயகி

மக்கள்:

மலர்மகள் - காகுந்தன்

நாமகள், வரதராஜன், சிவராஜன்

உமாமகள் - பகீரதன்.

'பொன்மொழியாரகம்',
வதிரி, கரவெட்டி. (9998)


SERENDIB சிறந்த சேவையின் சின்னம் SERENDIB
விமான சேவை
கட்டணத்தை சிந்தியுங்கள்....!
இலவச பஸ் சேவை விமான நிலையம் வரை
இரத்மலானை - வெள்ளவத்தை வரை
யாழ்.நகர் - பலாலி வரை
3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பயணச்சீட்டு இலவசம்!
SERENDIB - MANO
13,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0777 - 801038, 021 - 2222007, 0777-512648.
SERENDIB EXP
500, காலி வீதி, வெள்ளவத்தை
505632, 500626
மனோஜ்
67/A, WOLFENDALL STREET, COLOMBO - 13
074-612656, 01-390128, 0777-517019
(C/24554)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.